ஞானி

கலீல் ஜிப்ரான்

(The Prophet by Kahlil Gibran)



தெளிவுரை

நல்லான் சக்ரவர்த்தி

ஸ்ரீனிவாஸ ராமஸ்வாமி M.A., B.Sc.,

ஞானி

(The Prophet by Kahlil Gibran)

தெளிவுரை :

நல்லான் சக்ரவர்த்தி

ஸ்ரீநிவாஸராமஸ்வாமி, M. A., B. Sc.,

AKADEMIE INDIE
13, General Patters Road,
MADRAS - 600 002.

முதற் பதிப்பு : ஜனவரி 1982
பதிப்புரிமை : Akademie Indie.

அண்ட சராசரத்தின் ஆழத்தினின்று கலீல் ஜுப்ரான், தன் அறிவைப் பெறுகிறார். அதை அனுபவித்துப் பருகி, பக்குவமாக பாமர மனிதனுக்கு ஊட்டுகிறார்.

[கலீல் ஜுப்ரான் வரைந்த பதினேரு ஓவியங்கள் உள்ளன]

அச்சிட்டோர் :
ஜேகே பிரதர்ஸ், காஞ்சிபுரம் - 1.

படைப்பு


சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

மாபெரும் புருஷர் - என் அருமைத் தந்தை

புளிக்கல் ஔசப் மைக்கல்

அவர்களுக்கு.

P. M. ஜாய்.
உரிமையாளர்,
Akademie Indie.



ஞானி

அவர் அல்மூஸ்டபா, பெருமையுள்ளவர்: கிருபை யுள்ளவர்: அவர் வாழ்க்கையில், ஒளி வீசத் தொடங்கிய உஷத் காலம் அது. பனிரெண்டு ஆண்டுகள் ஆர்பிலீஸ் நகரத்தில், தன் கப்பல் வரும் என்று காத்து இருந்தார். அக்கலத்தில், அவர் திரும்ப வேண்டும்: தான் பிறந்த, தீவு இடத்தை அடையவேண்டும்.

அது பனிரெண்டாம் ஆண்டு: அறுவடை மாதம் ஏழாம் நாள்: (இலூல்) நகரின் வெளிச்சுவற்றுக்கு அப்பால், குன்றின் மேல் ஏறி, கடல் பக்கம் நோக்கினர். பனிமூட்டத்தினிடையே தன் கப்பல் வருவதைப் பார்த்தார்.

அவர் இதயம் உடன் மலர்ந்தது: அவர் மகிழ்ச்சி வெளிப்பட்டு, கடலின் வெகுதூரம் வரை பரவியது: கண்களை மூடி, அமைதியான தியானத்தில் ஆழ்ந்தார்.

குன்றை விட்டு, இறங்கும் பொழுது, ஒரு வகை வருத்தம் அவரை ஆட்கொண்டது. அவர் உள்ளத்தில் ஒரு எண்ணம் ஏற்பட்டது.

நான் எப்படி அமைதியாக, கவலை இல்லாமல் செல்ல முடியும்? முடியாது? என் உள்ளம் சலனமடைகிறது.

மனக் குறையில்லாமல், நான் இந்நகரத்தை விட்டு விலக முடியாது!

இந்த சுவர்களுக்கிடையில், நான் வேதனையுற்று, கழித்த நீண்ட நாட்கள் பல. நான் தனிமையில் சிதைந்த இரவுகள் எண்ணில, துயரத்தினின்றும், தனிமையினின்றும் வருத்தப்படாமல் யாரால் வெளியேற முடியும்?

என் சொரூபத்தின் பலசிதள்களை இந்த தெருக்களில், நான் இறைத்திருக்கின்றேன். என் ஆசையின் பல குழந்தைகள் நிர்வாணமாக இந்த குன்றுகளில் அலைகின்றன. நான் எப்படி திடீரென, இவர்களினின்று மனச்சுமையும், வேதனையில்லாமல், விலக முடியும்? முடியாது.

உடுத்திருக்கும் ஆடை ஒன்றை நான் களையவில்லை. என் சொந்தக் கரங்களாலேயே என் உடலின், தோல்தனை உறித்து எடுக்கிறேன்.

ஏதோ சிந்தனையை நான் இங்கு விட்டுச் செல்லவில்லை. இனிய என் இதயத்தை விட்டுச் செல்கிறேன். இங்கு, நான் கிடந்த பட்டினியையும், அடைந்த தாகமும், என் இதயத்திற்கு இனிய சுவையைக் கூட்டியது.

ஆயினும், நான் கால தாமதம் செய்ய இயலாது.

எல்லாவற்றையும், இழுத்து கவர்ந்து கொள்ளும், கடல் என்னையும் அழைக்கிறது. நான் உடனே கலத்தில் ஏற வேண்டும்.

இரவுக் காலம் வெப்பமாக, ஒளிர்ந்து கொண்டு இருந்தபோதிலும், இங்கு முடங்கி இருப்புதால், நான் உறைந்து இறுகிவிடுவேன்; ஒரு அமைப்பில், கட்டாயத்தில் இருப்பது போல் இருக்கும். இங்கு இருப்பது எல்லாவற்றையும், நான் எடுத்துச் செல்ல வேண்டும் போல் இருக்கின்றது. ஆனல் அது எப்படி முடியும்?

ஒரு குரல், அதை எழுப்பிய, நாவுதனை எடுத்துச் செல்ல முடியாது. தனக்கு வேகம் கொடுத்த உதடுகளையும் தன்னுடன் பெயர்த்து செல்ல முடியாது. தன்னந்தனியாகத் தான், அது வெளியை அடைய வேண்டும்.

தனியாகத் தான், தன் கூடுதனை விட்டு வெளியேறி, ஆகாயத்தில், கழுகு பறக்கின்றது.

அப்பொழுது, அவன் குன்றின் அடிவாரத்தை அடைந்தான். கடலைத் திரும்பிப் பார்த்தான். தன் கப்பல் துறையை அடைவதைக் கண்டான். அதன் முன் தளத்தில்,

ஞானி

மாலுமிகளை, தன் நாட்டு மக்களைக் கண்டான்.

அவன் அந்தராத்மா கூவியது அவர்களை நோக்கி: அவன் சொன்னான்.

பூதேவியின் தவப்புதல்வர்களே! அலைகடலை அளந்திடும் பெருவீரர்களே! என் கனவில், எத்தனை தடவை கடலில் மிதந்து சென்றிருக்கின்றீர்கள்! இப்பொழுது நான் விழித்திருக்கும் வேளையில், நீங்கள் வந்திருக்கின்றீர்கள்: இது என் ஆழ்ந்த கனவாகும்.

நான் புறப்படுவதற்குத் தயாராய் இருக்கின்றேன்: என் ஆவல் எனும் பாய்மரம் விரிந்து, வீசும் காற்றுக்காகக் காத்திருக்கின்றது. இப்படி புழுக்கம் நிறைந்த இடத்தில், ஒரு தடவை தான் சுவாசம் செய்வேன்: ஓரே ஒரு தடவை தான் திரும்பிப் பார்ப்பேன்.

பிறகு உங்களிடையே வந்துவிடுவேன். கடல் கடக்கும் வீரர்களில் ஒரு வீரனாக: பெருங்கடலே! அமைதியில் துயிலும் என் தாயே.

ஆறுகளும், நதியும் உன்னிடம் தான் புகலிடம் தேடி, அமைதியையும் விடுதலையும் காண்கின்றன.

இந்த ஆறு, அதன் கதியில், இன்னும், ஒரு திருப்பம்

தான் ஓடியாக வேண்டும். மற்றுமொரு விசும்பல் மட்டுமே, இந்த புல்வெளியில் எழும்.

பிறகு, நான் உன்னிடம் வந்திடுவேன்.. அளவிலாத் துளியாக, எல்லையிலா கடலுள், அடங்குவேன்.

அவன் நடந்து சென்ருன்: அப்பொழுது வெகுதூரத்தில், ஆண்களும் பெண்களும் வயல்களையும், திராட்சைத் தோட்டத்தையும் விட்டு, நகர வாயிலுக்கு, விரைந்து வருவதைக் கண்டான்.

அவர்கள் குரல் எழுப்பி, தன் பெயரைக் கூப்பிடுவதைக் கேட்டான். தன் கப்பல் வந்திருப்பதை, கூவிக்கூவி வயல்களில் வேலை செய்யும் மனிதர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

பிரிந்திடும் நாள் தான், மக்கள் கூடிடும் நாளோ!

இது உண்மையா! நான் பிரிந்திடும் வேளை தன்னில் தான், என் மகத்தான துவக்கமும் அடங்கி இருக்கின்றதா!

என்ஞல், அவர்களுக்கு என்ன கொடுக்க முடியும்? ஏர்தனை நடுவயலில் விட்டு, ஓடி வருகின்ருர்களே! திராட்சை

சாறு பிழியும் எந்திரத்தையும் நிறுத்தி விட்டு, என்னைப் பார்க்க ஓடி வருகின்றார்களே!

என் இதயம், காலமெனும் பழத்தால் முதிர்ந்து கனத்திருக்கின்றது! அவைகளைச் சேர்த்து' அவர்களுக்குக் கொடுக்கட்டுமா?

என் ஆசைகள், அருவி எனவே பாய்ந்து அவர்கள் பாத்திரங்களை நிரப்பட்டுமா! சர்வேஸ்வரன், வீணையெனும் என் உடலைத் தொட்டு, நாத வெள்ளத்தை எழுப்பப் போகின்றானோ! அல்லது அவன் எண்ணங்கள் வழியும் குழலாக நான் அமைவேனோ!

நான் அமைதியைத் தேடி அலைகின்றேன். நான் இந்த அமைதியில், பெரும் பொக்கிஷத்தையே காண்கிறேன். தன்னம்பிக்கையைத் தகர்த்தெறியும் அளவுக்குக் காண்கிறேன்.

இந்நாள் தான், என் அறுவடை நாள் எனில் நான் எந்த வயலில் விதை விதைத்தேன்? எந்த பருவத்தில், பயிர் செய்தேன்? எனக்கு நினைவு இல்லை!

இது தான் என் மகத்தான நேரம், என் ஒளிவிளக்கு உயர்ந்திடும் நேரம் எனில், என் வாழ்க்கையை ஒளிரச்

செய்யும் அந்த சுவாலை என்னுடையது அல்ல. என் விளக்குதனை காலியாக, இருளில் உயர்த்துகின்றேன்.

இரவுதனைக் காத்திடும் கடவுள், என் விளக்குதனை நிரப்பி, ஒளியூட்டுவான்.

இவைகளை, வார்த்தைகளில் அவன் பொழிந்தான். ஆனால், சொல்லப்படாமல், அவன் இதயத்தில் கனத்தது மிக அதிகம். ஏனெனில், ஆழ்ந்து அடங்கியிருக்கும் இரகசியங்களை அவனால் வெளியிட முடியவில்லை.

அவன் நகரத்தை அடைந்த பொழுது. எல்லோரும் அவனைச் சந்திக்க வந்திருந்தார்கள். ஒரே ஏக்கக்குரலில் அவர்கள் அழுதார்கள்.

ஊர் பெரியவர்கள், முன்னால் வந்து சொன்னார்கள்.

'எங்களிடமிருந்து, நீவீர் செல்லக் கூடாது. எமது அதிகாலை நேரத்தை, நண்பகல், என்வே பிரகாசிக்கச் செய்தீர்கள். உமது இளமை, எமது கனவுகளுக்கு சுவை யூட்டி, கனவு காணச் செய்தது.

எம்மிடையே, நீவீர் புதியவரல்ல : எமது விருந்தினரும் அல்ல : நீர் எமது புத்திரன் : எங்களால், மிகவும் நேசிக்கப் பட்டவர்.

உமது முகத்தைப் பார்க்காமல், ஏக்கமுறும்படி, எங்களைத் துன்புறுத்தாதே!

குருமார்கள், ஆண்களும், பெண்களும், அவனிடம் சொன்னார்கள்.

கடல் அலைகள் நம்மை இப்பொழுது பிரிக்கவேண்டாம்: நீ எம்மிடையே கழித்த நாட்கள் வெறும் நினைவாக மாற வேண்டாம். எங்களிடையே ஆத்மசக்தியாக நீ உலவி இருக்கின்றாய்! உன் நிழல், எங்கள் முகங்களுக்கு ஒளி வீசியிருக்கின்றது.

நாங்கள் நிரம்பவும் உன்னை நேசித்து இருக்கின்றோம். எமது அன்பு, வார்த்தைகளால் வெளிப்படாதது. அது, திரைகளால், திரையிடப்பட்டு இருக்கின்றது.

ஆயினும், அது இப்பொழுது, உன்னை நோக்கி உரக்கக் கூவுகின்றது. அவ்வன்பு வெளிப்பட்டு, உன்முன் நிற்கிறது.

எப்பொழுதும், இருந்திருக்கின்ற அந்த அன்பிற்கு அதன் ஆழம் தெரியவில்லை. இப்பொழுதுதான், நீ பிரியும் வேளை தன்னில் அதன் தாபம் அதிகமாகத் தெரிகின்றது.

ஞானி

மேலும் பலர் வந்தார்கள். வேண்டிக் கொண்டார்கள், அவன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவன் தலைமட்டும் குனிந்து கொண்டிருந்தான்.

அவன் அருகில் இருந்தவர்கள், கண்ணீர் மார்பகத்தில் வழிவதைக் கண்டனர்.

அவனும், மக்கள் திரளும், கோயில்முன் உள்ள அரங்கில் கூடினர்.

கோயில் கர்ப்பக் கிரகத்தினின்று ஒரு பெண்மணி வெளிப்பட்டாள், அவள் ஆல்மித்ரா எனும் பெயரினள்: அவள் ஒரு தீர்க்கதரிசினி.

மிகுந்த பரிவுடன் அவன், அவளை உற்று நோக்கினான். அவள்தான் அவனை முதலில் கண்டுகொண்டவள். அந் நகரத்தில் அவள் ஒருநாள் தான் இருந்திருந்த நேரத்தில், அவனை முற்றிலும் உணர்ந்து, அவனிடம் பெரும் பக்தி வைத்தவள் அவள்.

அவனை, அவள் வணங்கி, பேசலுற்றாள் :

தெய்வீக ஒளியே! காலங்களின் எல்லைகளைக் காணும் ஆர்வத்தில், உன் கலத்தை வேண்டி, வெகு தூரங்களை, வெகு காலம் தேடியிருக்கின்றாய்,

ஞானி

இப்பொழுது உன் கலம் வந்துவிட்டது. நீ போக வேண்டும்.

உன் நீங்காத நினைவுகளில் நிலைத்து இருக்கும். உன் நாட்டுப்பற்று ஆழமானது. உன் மிக அதிக ஆசைகள் அங்குதான் குடிகொண்டு இருக்கின்றன. எங்கள் அன்பு உன்னைக் கட்டுப்படுத்தாது. எங்கள் தேவைகளும் உன்னை இங்கே தங்கவைக்காது.

ஆயினும், நீ இதைவிட்டுப் போகுமுன், நாங்கள் வேண்டிக்கொள்கிறோம்: நீ எங்களிடையே பேசவேண்டும்: உன் உண்மைகளை எங்களுக்கு உரைக்கவேண்டும்.

அதை எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுவோம்: அவர்கள் தம் மக்களுக்குச் சொல்லுவார்கள், ஆகவே, உன் சொல், நித்திய, நிரந்தர காவியமாய், இவ்வுலகில் உலவிவரும்.

நீ விலகி இருந்து, எங்கள் வேலை நாட்களைக் கவனித்து இருக்கின்றாய். நீ விழித்திருக்கும் பொழுது, எங்கள் தூக்கத்தின், அழுகையையும், ஆனந்தத்தையும் கேட்டிருக்கின்றாய்.

இப்பொழுது, எங்களை எங்களுக்குப் புரியவையுங்கள். இறப்புக்கும், பிறப்புக்கும் இடையே, நீவீர், உணர்ந்தவைகளை கண்டவைகளை எமக்குச் சொல்லுவாய்.

அவன் பதில் சொல்லலுற்ருன் :

ஆர்பிலீஸ் பெருமக்களே! எதைப் பற்றி நான் பேச! உங்கள் உள்ளத்தில். ஆத்மா சுழலில் இப்பொழுது, இயங்கு கின்றவற்றைத்தான் பேசவேண்டும்.

அல்மேத்ரா கேட்டாள்: எங்களுக்கு அன்பைப்பற்றிப் பேசு.

அவன் தலையை நிமிர்த்திஞன்: மக்களை உற்று நோக்கிஞன்: ஒரு கனத்த மௌனம் அங்கு நிலவியது. கம்பீரமான குரலில் அவன் பேசலுற்ருன்.

அன்பின் விழிகள் கடினமானவை: அதன் படிகள் ஏற முடியாத அளவுக்குச் செங்குத்தானவை: இருந்தும் அவன் உன்னை அரவணைக்கும்பொழுது, அவன்பின் செல்.

அவன் இறக்கைகளின் மடிப்புகளில் உன்னை வதைக்கும் கத்தியும், பொதிந்து இருக்கலாம். இருந்தும், உன்னை அவன் அரவணைக்கும்பொழுது அவனிடம் செல்.

அவன் குரல், வடதிசைக் காற்று தோட்டத்தை நாசம் செய்வதுபோல், உன் கனவுகளைச் சிதைத்து விடலாம். அப்படி இருந்தாலும், அவன் உன்னிடம் பேசும்பொழுது, அவனிடம் நம்பிக்கைகொள்.

ஞானி

அவன் உனக்கு மகுடம் சூட்டுவதைப்போல், உன்னை சித்ரவதையும் செய்வான். உன் வளர்ச்சியில் அவன் நாட்டம் கொள்வதைப்போல், உன் உதிரிகளையும் அவன் களைந்து வெட்டி விடுவான் : சுத்தம் செய்து விடுவான்.

நடுங்கும் உச்சிக்குச் சென்று, சூரிய ஒளியில், உன் மிருதுவான அங்கங்களை, ஸ்பரிசித்து ஆறுதல் அளிக்கும் அவன், உன் வேர் அடித்தளத்திற்கும் சென்று, உன் ஊன்றிய வேர் அறுந்துபடும்படி நடுங்கவும் செய்வான்.

தான்யக் கதிர்களைப்போல் அவன் உன்னை அணைத்தும் கொள்வான்.

அவன் உன்னை அதிரடி கொடுத்து நிர்வாணம் ஆக்கி விடுவான்.

உன் உமியை நீக்கவே, உன்னைப் புடைப்பான்.

அதே சமயம், உன்னை அரைத்து வெண்மையாக ஆக்கி விடுவான்.

உன்னை வளைந்துகொடுக்கும் பண்பு ஏற்படும்படி அழுக்கி விட்டுவிடுவான்.

இறைவன் சந்நிதானத்தில் உன்னை சமர்ப்பிக்கவேண்டிய தகுதி பெறும் பொருட்டு, உன்னைப் புனிதத் தீயில் இட்டு

விடுவான். அப்பொழுதுதான். புனிதமான ரொட்டியின் தன்மை அடைகிருய்.

இவைகள் அனைத்தும் அன்பு உனக்குச் செய்கிறது ஏன் தெரியுமா? இதயத்தின் அந்தரங்கங்களை நீ புரிந்து கொள்ளவேண்டும். அந்த அறிவின் ஆற்றலில் நீ வாழ்வின் இதயத்துடிப்பில் ஒன்றிட்போகவேண்டும்.

நீ பயம்கொண்டு, அன்பின் அமைதியையும், இன்பங்களை மட்டுமே நீ நாடுவாயே யாகில்,

உனக்கு நல்லது எது எனில், உன் அந்தரங்கங்களை மூடிக்கொள்வதுதான். அன்பின் அ ற வ ழி யி னி ன் று விலகிக்கொள்.

பருவங்கள் இல்லா உலகுதன்னிலே நீ இன்பம் கொண்டாடுவாய். ஆனுல் எல்லா மகிழ்ச்சிகளையும் நீ பெற முடியாது. நீ அழலாம்; ஆனுல், எல்லா கண்ணீர் துளை களையும் சிந்த முடியாது.

அன்பு தன்னையே கொடுக்கும் தன்மையது. வேறு ஒன்றையும் கொடுக்காது. எதையும் எடுத்துக் கொள்ளாது. தன்னிடத்து மட்டுமே எடுத்துக் கொள்ளும்.

ஞானி

அன்பு எதையுமே ஆட்கொள்ளாது. அதை யாரும் ஆட்கொள்ள முடியாது. அன்பு அன்பிற்கே ஈடுகொடுக்கும். அதுவே அதற்குப் போதுமானது.

நீ அன்பு செலுத்தும் பொழுது, "கடவுள் என் இதயத்தில் இருக்கிருர்," என்று சொல்லாதே! ஆனுல் நான் கடவுள் இதயத்தில் குடிகொண்டிருக்கிறேன், என்று சொல்லவேண்டும்.

நீ அன்பு வழியை ஆணையிட்டு செலுத்தலாம் என்று நினைக்காதே! ஆனுல், அன்பு உன்னை அருகதையான பாத்திரம் என்று கண்டுகொண்டால், அது உன் வழியைச் செலுத்தும்.

அன்பிற்கு வேறு குறிக்கோள் இல்லை அதன் குறிக்கோளை நிறைவேற்றுவதைத் தவிர,

நீ அன்பு செலுத்த வேண்டுமாயின், ஆசைகள் தேவைப்பட்டால், இவைகளே உன் ஆசைகளாக இருக்கட்டும்.

உருகி, இரவில் இனிமையாக சலசலக்கும், அருவியைப் போல் நீ இரு. மிக அதிகமான பிரிவின், துன்பத்தைத் தெரிந்துகொள்.

ஞானி

நீ அன்பினை அறிந்துகொள்ளும் பொழுது, நீ அதனால் துயரப்பட்டு, துன்பப்படுவாய்.

மகிழ்வுடன், இரத்தம் சிந்தி துயரப்படுவதற்கும் தயாராய் இரு.

இலேசான, பறந்திடும் இதயத்தை காலையில் எழுந்தவுடன் பெற்று, அன்பின் மற்றொரு நாள் முடியும்பொழுது நன்றி செலுத்து.

நடுப்பகல் வேளையில் ஓய்வுகொண்டு அன்பின் அற்புத சுவர்க்கத்தைத் தியானித்துப் பெறு.

மாலையில் நன்றி பெருக்குடன் வீடு திரும்பு.

உன் இதய அன்பை பெறும் சுவர்களுக்கு, பிரார்த்தனை செய்து, இனிய கீதம் உன் உதடுகளில் தாண்டவம் புரிய நீ துகில்கொள்.

★

மீண்டும் அல்மேத்ரா பெசுலுற்ருள். எஜமானரே திருமணத்தைப் பற்றிச் சற்று சொல்லுங்கள்.

மேலும் அவன் பதில் சொல்லலுற்ருன்:

நீங்கள் சேர்ந்து பிறந்திருக்கின்றீர்கள். இன்னும், நீங்கள் எப்பொழுதும் இணைந்திருப்பீர்கள்.

இறப்பின் வெண்சிறகுகள், உங்கள் வாழ்நாளை, முடித்து சிதைக்கும் பொழுது, நீங்கள் சேர்ந்திருப்பீர்கள்.

ஏன், நீங்கள் இறைவனின் மௌனமான நினைவில் கூட இணைந்திருப்பீர்கள். ஆனல் இந்தப் பிணைப்பில் சற்று இடைவெளி இருக்கட்டும். சொர்க்கத்தின் இதமான வீசும் காற்று உங்களிடையே களிநடனம் புரியட்டும்.

ஒருவரை ஒருவர் நேசியுங்கள். ஆனல், அன்பினல் பிணைத்துக் கொள்ளாதீர்கள்.

உங்கள் ஆத்மாவெனும் கரைகளிடையே புரளும் கடல் அலைகள் நகர்ந்து கொண்டிருக்கட்டும்.

ஒவ்வொருவரும் மற்றவரின் பாத்திரத்தை நிரப்புங்கள், ஆனல் ஒரே பாத்திரத்தினின்று அருந்தாதீர்கள்.

ஞானி

உங்கள் ரொட்டியைப் பகிர்ந்து கொள்ளுங்கள். ஆனால் ஒரே துண்டிலிருந்து சேர்ந்து உண்ணாதீர்கள்.

சேர்ந்து ஆடிப்பாடி, மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்யுங்கள். ஆனால் அதே சமயம், தனியாகவும் இருக்கத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒரு வீணையில் உள்ள கம்பிகள் தனியாக இருந்து இணைந்து இயங்கி இன்பநாதம் எழுப்புகின்றது அல்லவா?

இதயத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். ஆனால் இதயத்தை, துணையிடம் விட்டு விடாதீர்கள்.

ஏனெனில், வாழ்க்கைக் கரம் ஒன்றே உங்கள் இதயத்தைப் பெற்றிட முடியும்.

சேர்ந்து நில்லுங்கள். ஆனால் மிக்க நெருக்கமாக இருக்காதீர்கள். ஏனெனில் கோயிலை சேர்ந்து தாங்கும் கம்பங்கள், தனியாகவே இருக்கின்றன.

ஒக் மரமும், ஸைப்ரஸ் மரமும் மற்றொன்றின் நிழலிலே வளருவது இல்லை.

★

தன் மார்பில் குழந்தையை சாய்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணி கேட்டாள்.

குழந்தையைப் பற்றிச் சொல்லுங்கள்.

அவன் சொன்னான்.

உங்கள் குழந்தைகள், உங்கள் குழந்தைகள் அல்ல.

வாழ்க்கை வேகம், உயிர் சக்தி இவ்வுலகில் நிலைத்து நிற்க, இயற்கை நியதியின் பிள்ளைகளும், பெண்களுமே இவர்கள். குழந்தைகள் உங்கள் மூலமாக வருகிறார்கள். ஆனால் உங்களிடமிருந்து அல்ல. அவர்கள் உங்களோடு இருந்தாலும், அவர்கள் உங்களுக்கு சொந்தமானவர்கள் இல்லை.

நீங்கள் அவர்களிடம் அன்பு செலுத்தலாம். ஆனால் உங்கள் சிந்தனையை அவர்களுக்கு ஊட்டக்கூடாது. ஏனெனில் அவர்களுக்கு சுயமாகவே சிந்தனையுண்டு.

உங்களால் அவர்களின் உடல்களைத்தான் பேணமுடியும்: ஆத்மாக்களை அல்ல.

ஏனென்றால், நாளையெனும் வீட்டில் அவர்கள் ஆத்மாக்கள் வசிக்கின்றன, அதை உங்களால் பார்க்கவும் முடியாது,

எட்டவும் முடியாது. கனவில்கூட முடியாது.

நீங்கள் அவர்களைப்போல் இருக்கலாம்: ஆனால், அவர்களை உங்களைப்போல் உருவாக்க முயற்சிக்காதீர்கள்.

வாழ்க்கை பின்னோக்கிச் செல்வதில்லை: அது நேற்றைய தினத்தோடு தங்கித் தாமதிப்பதும் இல்லை.

நீங்கள் நாண் ஏற்றிய வில்: அதனின்று உயிருள்ள அம்புகளாக, உங்கள் குழந்தைகள் வெளியேறுகின்றார்கள்.

அளவிலா அண்ட சராசரத்தின் பாதையில், வில்லாளன் பாதையைப் பார்க்கிறான். அதில் தெரிகின்ற குறியையும் காண்கிறான்.

சர்வேஸ்வரன், தன் முழு சக்தியையும் பிரயோகித்து உன்னை வளைக்கிறான், அவன் அம்புகள் வேகமாகவும், வெகு தூரமும் போகவேண்டுமென்று !

வில்லாளன் (சர்வேஸ்வரன்) கையில், உன்னில் ஏற்படும் இந்த வளைவு, மகிழ்ச்சிக்காகவே இருக்கட்டும்.

சர்வேஸ்வரன், விரைந்திடும் அம்பை நேசிப்பதோடு மட்டுமல்லாமல், நிலையாக இருக்கும் வில்லையும், அஃதேபோல் நேசிக்கிறான்.

பிறகு பெரும் பணம் உள்ளவர் ஒருவர் கேட்டார்.

ஈகையைப் (கொடுத்தல்) பற்றிச் சொல்லுங்கள் :

உன் சொத்திலிருந்து, நீ கொடுக்கும் பொழுது, நீ ஒன்றுமே கொடுக்கவில்லை என்று தெரிந்துகொள்.

நீ உன்னையே கொடுக்கும்பொழுதுதான் நீ உண்மையாகக் கொடுக்கின்றாம்.

உன் சொத்து என்பது என்ன தெரியுமா ?

நாளைக்கு வேண்டும் என, நீ வைத்திருக்கும் பொருள் தேவை ஏற்படும் என பயந்து, சேமித்திருக்கும் பொருள் :

நாளை என்பது என்ன ? மிகவும் ஜாக்கிரதையான புத்திசாலியான நாய் ஒன்று, புனித ஸ்தலத்திற்குச் செல்லும் யாத்ரீகர்கள் பின்னுல் சென்றுகொண்டிருந்தது. வழியில் கிடைத்த எலும்புத் துண்டுகளை எல்லாம் பொறுக்கி, வழியில்லாத மணலில் எல்லாம் புதைத்து வைத்ததாம்! நாளை எங்கே இருப்போம், என்ன வரும் என்று, அதற்குத் தெரியுமா ?

தேவைபற்றிய பயம் ஏன் ? தேவைதான் !

உன் கிணறு நிரம்பி இருக்கின்றது: ஆயினும் தாகம் என்று ஏன் அலறுகின்றாய்? தாகம் ஏற்படும் என்ற பதட்டமே

ஞானி

தணிக்க முடியாத தாகமே, தாகமாக மாறுகின்றதா ?

அதிகம் வைத்திருக்கும் பலர் மிகச் சிறிதளவே கொடுக்கின்றனர்· புகழ் வேண்டுகின்றார்கள்: சொல்லிக்கொள்ள முடியாத அவர்கள் ஆசை, வள்ளல் பெருமையை, குறைத்து விடுகின்றது: ஈகைப் பண்பு அங்கு பூர்த்தியாவது இல்லை.

மற்றும் உள்ளோர் (வைத்திருப்பவர்), தங்களிடம் சிறிதளவு இருந்தாலும், அந்த எல்லாவற்றையும் கொடுத்து விடுகிறார்கள்.

இவர்கள்தான், வாழ்க்கையில் நம்பிக்கை உள்ளவர்கள்: வாழ்வின் வளமையைப் புரிந்துகொண்டவர்கள். அவர்கள் கஜானா எப்பொழுதும் காலியாவது இல்லை.

மகிழ்ச்சியுடன் கொடுப்பவர்களே, உண்மையில் கொடுப்பவர்கள்: அம்மகிழ்வுதான் அவர்களுக்கு வெகுமதி: நன்றிக் கடன்.

முகம் சுளித்து, வேதனையுடன் கொடுப்பவர்களும் உளர்: அவ்வேதனைதான், அவர்களின் புகழாகும்: பெயராகும்.

கொடுப்பதில், எதையும் உணராதவர்களும் உள்ளனர். அதில் மகிழ்ச்சியும் கொள்ளார், துயரும் அடையார்: தாங்கள் ஏதோ புண்ணியம் செய்வதாகவும் நினைப்பதில்லை.

ஞானி

தூரத்தில் உள்ள பள்ளத்தாக்கில் மலரும் காட்டுமல்லிகை எப்படிக் காற்றுக்கு வஸந்தத்தை அள்ளிக்கொடுத்து அனுப்பு கின்றதோ, அஃதேபோல் அவர்களும் கொடுக்கின்ருர்கள்.

இப்படிப்பட்ட வள்ளல்கள் மூலம்தான் கடவுள் பேசுகிருர்: இவர்கள் கண்கள் வழியாகத்தான் கடவுள் புவியில் புன்னகை புரிகின்ருர்கள்.

கேட்கும்பொழுது கொடுப்பது நல்லதுதான்: ஆனுல் கேட்காமலே கொடுப்பதுதான் சிறந்தது. புரிந்து, தெரிந்து கொடுப்பதுதான் ஈகை.

வள்ளல் குணம் உள்ளவன், தானம் பெற்றுக்கொள்பவனை தேடியலைகிருன். கொடுப்பதைவிட அதில் பெருமை கொள்கிருன்.

எதையுமே, வைத்துக்கொள்ளக் கூடாதா? முடியாதா?

நீ வைத்திருக்கும் எல்லாவற்றையும் ஒருநாள் கொடுத்து தான் தீரவேண்டும். ஆதலின் இப்பொழுதே கொடுத்துவிடு. அப்பெருமை, வள்ளல் தன்மை உன்னுடையதாகவே இருக் கட்டும்: அதை, அப்பெருமையை, உன் சந்ததிக்கு, நீ வைத்துப் போகவேண்டாம்.

ஞானி

நீ அடிக்கடி சொல்லுகிருய், "நான் கொடுப்பேன்: ஆனுல் பாத்திரம் அறிந்துதான் கொடுப்பேன்", என்று.

உன் பழத்தோட்டத்திலுள்ள மரங்கள் அப்படித்தான் சொல்கின்றனவா? புல்வெளியிலுள்ள ஆட்டு மந்தைகள் அப்படித்தான் சொல்லுகின்றனவா? இல்லையல்லவா?

அவைகள் உயிர்வாழ்வதற்காக. கொடுக்கின்றன: கொடுக்காமல் இருந்தால், அவைகள் செத்துவிடும்.

நிச்சயமாக, இரவு – பகல்களை தனதாக்கிக்கொள்ளும் ஒவ்வொருவரும், உன்னிடம் பெறுவதற்குத் தகுதி படைத்தவர்களே.

உயிர் வாழ்க்கையெனும் பெருங்கடலினின்று, பருகத் தகுதி பெற்றவர்கள் அனைவரும் உன் சிறிய நீர் ஓடையினின்று தன் கலத்தை நிரப்பிக்கொள்வதற்குத் தகுதி பெற்றவர்களே.

ஒருவனுக்கு எது அதிக பெருமை அளிக்கும் தெரியுமா? அவன் மனே திடமும், தன்னம்பிக்கையும்: இல்லை: தர்மம் செய்வதில், பெற்றுக்கொள்வதில்.

நீ யார் மனிதர்களின் தகுதியை நிர்ணயிப்பதற்கு? ஏன் அவர்கள் உன்முன் மார்பைத் திறந்து, தங்கள் மானத்தை விட்டு, நிர்வாணமாக, நிராதரவாக வெட்கமின்றி நிற்க வேண்டும்?

ஞானி

வள்ளல் எனவே, உன்னைக் கூப்பிட்டுக் கொள்வதற்கு உனக்குத் தகுதி இருக்கின்றதா? என்று உன்னை முதலில் சோதனை செய்துகொள். உன்னால் கொடுக்கும் கருவியாகச் செயல்பட முடியுமா? என்று எண்ணிப்பார்.

உண்மையைச் சொல்லுமிடத்து, உயிர்தான்; மற்றொரு உயிரைக் கொடுக்க முடியும்: சத்து ஊட்ட முடியும்: நீ உன்னை கொடுப்பவன் என்று தகுதி படைத்தவனுக்கிக்கொள்ளும் பொழுது, நீ ஒரு சாட்சிதான் என்று நினைவு கூறு.


பெற்றுக்கொள்பவர்களே! நீங்கள் எல்லோரும் வாங்கு பவர்கள்தான் – அதற்காக நீங்கள் ஒன்றும் கடமைப்பட்டவர் கள் அல்ல.


அப்படி நினைப்பீர்கள் எனில், அந்த சுமை உங்களை மட்டுமல்ல, கொடுப்பவனையும்கூட அழுத்தும்.

இறக்கைக் கொண்டு எழுவதுபோல், கொடுப்பவனுடன் சமமாக, சேர்ந்து எழுந்திருங்கள்.

உங்கள் கடனைப்பற்றி கவலைப்பட்டால், கொடுத்தவனின் வள்ளல் தன்மையைப்பற்றி. பெருமையையபற்றி சந்தேகித்தவர் களாவீர்கள். அவனுக்கும், எதையும் அள்ளிக்கொடுக்கும் பூமியெனும் தாயும், கடவுள் எனும் தகப்பனும் உள்ளனர்.























ஒரு வயதான மனிதன், ஒருவிடுதியின் சொந்தக்காரன் கேட்டான்.

உண்ணுவதையும், குடிப்பதையும்பற்றிச் சொல்லுங்கள்:

அவன் சொல்லலுற்ருன் ;

மண்ணின் நறுமணம் கொண்டு உங்களால் வாழ முடியுமா ? காற்றில், சூரிய ஒளியில் வாழும் செடியைப்போல் உங்களால் வாழ முடியுமா ?

உயிர் வாழ, கொன்றுதான் ஆகவேண்டும்: என்பது உங்கள் நியதி, உங்கள் தாகத்தைத் தணிக்க, கன்று குடிக்கும் தாய்ப்பாலை திருடித்தான் பிழைக்கவேண்டும். ஆகவே அதில் தெய்வ அம்சம் இருக்கவே, உண்ணும்பொழுது பிரார்த்தனை செய்யுங்கள்.

"உங்கள் சாப்பாட்டு மேசை பிரார்த்தனை கூடமாக இருக்கட்டும். அதில் பலியாகும் புனிதமான, அறியாமை நிரம்பிய, காட்டிலும், நாட்டிலும் வாழும் ஜீவன்கள், மனிதனின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கின்ற மிக பரிசுத்தமான, இன்னும் மிக பவித்திரமான ஆவிக்கு நைவேத்தியமாகட்டும்,

ஒரு மிருகத்தைக் கொல்லும்பொழுது, உங்கள் இதயத்தில் இதைக் கூறிக்கொள்ளுங்கள்.

ஞானி

எந்த சக்தியானது, இந்த மிருகத்தைக் கொல்லுகின்றதோ, அதனால் நானும் கொல்லப்படுவேன். நானும் அதனால் ஜீரணிக்கப்படுவேன்.

எந்த நியதி, இந்த மிருகத்தை என் கையில் சிக்க வைத்ததோ, அதே நியதியின் அடிப்படையில், நான் வேறு பலம் வாய்ந்த கைக்கு இரையாவேன்.

இம்மிருகத்தின் இரத்தமும், என்னுடைய இரத்தமும், வேறு இல்லை. உயிர் தவிர வேறு இல்லை.

இதுவே, இறைமையின் பெரு மரத்தைப் பேணுகிறது.

ஒரு ஆப்பிள், உன் பற்களிடையே நொறுங்கும்பொழுது, உன் இதயத்தில் கூறிக்கொள்.

" உன் விதைகள், என் உடலில் உயிருடன் இருக்கும் ".

" உன் நாளைய மொட்டு என் இதயத்தில் மலரும் ".

" உன் மனமே என் மூச்சாக இருக்கும் ".

" நாம் இருவரும் சேர்ந்து பருவங்களைக் கழித்து மகிழ்வோம் ".

இலையுதிர் காலத்தில், பிழிவதற்காக, தோட்டத்திலிருந்து திராட்சைப் பழங்களைச் சேர்க்கும்பொழுது, உன் இதயத்தில் இது ஒலிக்கட்டும்.

ஞானி

" நான்கூட ஒரு திராட்சைத் தோட்டம்தான். என்னுடைய பழமும், பிழிவதற்காக, எந்திரத்திற்குச் சேகரிக்கப் படும்".

" புதிய ஒயினைப்போல், நான் அழியாப் பாத்திரங்களில் வைக்கப்படுவேன் ".

" குளிர்காலத்தில், ஒயினை எடுக்கும்பொழுது, உன் இதயத்தில், ஒவ்வொரு கோப்பை பருகும்பொழுதும், பாட்டல் எழுப்பவும் ".

இலையுதிர் நாட்களுக்கு, பாடலில் நினைவு கூறுங்கள் திராட்சை தோட்டமும், பிழியும் எந்திரங்களும், அப்பாடலில் இடம் பெற்று, நினைவில் இருக்கட்டும்.

★

வேலை

ஓர் ஏர் உழவன் கேட்டான் :

" வேலை " என்பதைப் பற்றிச் சொல்லுங்கள் :

அவன் பதில் சொல்லலுற்றான்.

நீ வேலை செய்கிறாய்! ஏன் தெரியுமா? இப்புவி வாழ்வு இயங்குவதற்கும், இப்புவியின் ஆத்மசக்திக்கு ஈடு கொடுப்பதற்கும் நீ வேலை செய்கிறாய்.

நீ சோம்பி இருந்தால், இயற்கையின் பருவங்களுக்கு பொருந்தாமல் வித்தியாசப்பட்டவனாகக் காட்சி அளிப்பாய். அளப்பறிய, அண்ட சராசரத்தினிடம் அடிபணிய, கம்பீர நடை போடும், வாழ்க்கையின் ஊர்வலத்தினின்று விலகி ஒதுங்கி இருப்பாய்.

பணி புரியும்பொழுது, நீ குழலாகின்றாய். அதன் இதயம் வழியாக, முணுமுணுக்கும் மணித்துளிகள், இனிய கானமாக மாறுகின்றன.

மற்றவையெல்லாம் இணைந்து, சேர்ந்து இனிய கானம் எழுப்பும் பொழுது உங்களில் யார், உண்மையில் ஊமை யாய், மௌனமாய் வெறும் நாணல் குழலாய் இருக்கச்

ஞானி

சம்மதிப்பீர்! உங்களுக்கு எப்பொழுதுமே சொல்லப்பட்டு வந்திருக்கின்றது.

வேலை செய்வது ஒரு சாபக் கேடு. உழைப்பது ஒரு துர்அதிர்ஷ்டம் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் வேலை செய்யும்பொழுது ஒரு கனவை பூர்த்தி செய்கின்றீர்கள். அந்த கனவு பிறக்கும் பொழுதே, அது உங்களுக்கெனவே ஒதுக்கப்பட்டு காத்திருக்கின்றது. நீங்கள் உழைப்பைச் செய்வதன் மூலம் உண்மையில் வாழ்க்கையை நேசித்தவர் ஆவீர்.

வாழ்வை, உழைப்பின் மூலம் நேசிப்பதனுல், வாழ்வின் அந்தரங்க ரகசியங்களை மிக நெருக்கமாக உணரலாம்.

ஆனுல், நீ உன் சஞ்சலத்தில், வாழ்க்கையை வேதனையென்றும், இந்த சதைப்பிண்டத்தைக் காப்பாற்றுவது சாபம் என்றும். இது என் தலைவிதியென்றும் அங்கலாய்த்துக் கொண்டால், அதற்கு என்னுல் பதில் சொல்ல முடியாது. ஆனுல் உழைப்பின் விளைவாக உன் நெற்றியில் வழியும் வியர்வை அந்தத் தலையெழுத்தை அழித்துவிடும். உங்களுக்குச் சொல்லியிருக்கின்றுர்கள் வாழ்க்கை இருள் சூழ்ந்ததென்று: உங்கள் கஷ்டகாலத்தில், தந்நம்பிக்கை

யில்லாத ஒருவன், சொல்லிப் போனதை நம்பிக்கொண்டு இருக்கின்றீர்கள்:

ஆம் உண்மை தான்: வாழ்க்கை இருள் கவ்வியது தான், வேகம் இல்லாத நேரம் தவிர: வாழ்வின் எல்லா வேகமும் அர்த்தம் இல்லாமல் போகும், அறிவின் நோக்கு இருக்கின்ற இடம் தவிர,

அறிவின் பலன் இல்லாமல் போகும், உழைப்புத்திறன் இருக்கும் இடம் தவிர, உழைப்பு பொருளில்லாமல் போகும், அன்பு செயலாற்றும் இடம் தவிர,

நீ உண்மையுடன் அன்புடன் உழைக்கும்பொழுது, உன்னை உன்னுடன் பிணைத்துக் கொள்ளுகிறாய்: பிறருடனும் ஏன் கடவுளிடமும் பிணைத்துக் கொள்கிறாய். உண்மையுடன் அன்புடன் வேலை செய்வது என்றால் என்ன?

துணி நெய்யும்பொழுது, உன் இதயத்தினின்று இழைகளை எடுத்து வேலையைச் செய். எப்படியெனில், அந்த ஆடை உன் அன்புக்கு பாத்திரமானவர் அணியப் போவதாக உணர்ந்துகொள்.

ஒரு வீட்டை நிர்மானிக்கும்பொழுது, பாசத்துடன் செய். உன்னால் நேசிக்கப் படுபவர் அவ்வீட்டில் குடியிருக்கப் போவதாகக் கருதிக்கொள்.

ஞானி

கருத்துடன் விதைத்தலைச் செய். முகமலர்ச்சியுடன் அறுவடை செய். உன் ஆசைக்குப் பாத்திரமானவர் பலனை அனுபவிக்கப் போவதாகக் கருதிச் செய்.

செயலாற்றக் கூடிய எல்லா விஷயங்களிலும் உன் முத்திரை இருக்கட்டும். அவைகளில் உன் தனித்தன்மை சக்தியாக இயங்கட்டும். இதையும் தெரிந்துகொள். இறந்து மறைந்து போன ஆத்மாக்கள், உன்னைச் சுற்றி நின்று கவனிக்கின்றார்கள் என்று

நீ தூக்கத்தில் பேசுவதைப்போல், அடிக்கடிப் பிதற்றுவதை நான் கேட்டிருக்கிறேன்.

"எவனொருவன் சலவைக் கல்லில் வேலை செய்கிறானோ, கல்லில் தன் ஆத்ம சிந்தனையை வடிக்கின்றானோ, அவன் ஏர் உழவனைவிட உயர்ந்தவன்".

"எவனொருவன் வானவில்லைப் பிடித்து மனிதனின் உருவத்தைப் போல் சித்திரத் துணியில் வடிக்கின்றானோ, அவன் கால்களுக்குச் செருப்பு தைக்கின்றவனைவிட உயர்ந்தவன்".

ஆனால் நான் சொல்லுகிறேன். தூக்கத்தில் அல்ல; நல்ல மதிய நேரத்தில், மிக நன்றாக விழித்துக்கொண்டு சொல்லுகிறேன். இராட்சச ஓக் மரங்களினிடையே வீசும்

ஞானி

காற்று, சிறிய புல் இலைகளினிடையே வீசுவதை விட, மிக இனிமையாக ஒலிப்பது இல்லை.

எவன் உயர்ந்தவன் தெரியுமா? எவனொருவன் காற்றின் குரலை நேசித்து, அதில் கானம் சேர்த்து, அதை இனிமையாக்குகின்றானோ அவன் தான் உண்மையில் உயர்ந்தவன், சிறந்தவன்.

வேலை என்பது என்ன தெரியுமா? அன்புதனை வெளிக் காட்டுவது.

அன்புகொண்டு, உன்னால் வேலை செய்ய முடியாது எனில், வெறுப்புடன் தான் வேலை செய்ய முடியும் என்றால், நீ வேலை செய்வதை விட்டு விடுவது நல்லது. மிக நல்லது. கோயில் வாயிற்படியில் உட்கார்ந்து, மகிழ்ச்சியுடன் வேலை செய்வோரிடம் இரந்து வாழ்வது நல்லது. ஆம் அதுதான் உனக்கு மிக நல்லது.

அலட்சியமாக, நீ ரொட்டி சுட்டால் அந்த குரூரமான ரொட்டி, ஒரு மனிதனின் பசியை அரை குறையாகத் தான் தீர்க்கும். திராட்சைப் பழத்தினின்று, சாறு பிழிவதை நீ மனவுறுத்தலுடன் செய்தால், அந்த வெறுப்பு பழரசத்தில் (Wine) விஷமாக வடியும்.

ஞானி

நீ தேவதைப் போல் பாடலாம். ஆனால் அக்குரலை நேசமுடன் எழுப்பாவிட்டால், பகலின் குரல்களையும், இரவின் குரல்களையும் மனிதனின் காதுகளில் கேட்க முடியாதபடி கொடூரமாக்குகின்றாய்.

ஞானி

ஒரு பெண் கேட்டாள்.

எங்களுக்கு மகிழ்ச்சியையும், வருத்தத்தையும் பற்றி சொல்லுவாய்.

அவன் பதில் சொன்னான் :

உங்கன் மகிழ்ச்சி என்பது, உங்கள் வருத்தம் வெளிப் படுவது தான்.

எந்த ஊற்றினின்று உங்கள் புன்னகை எழுகின்றதோ, அதே ஊற்றுதான், அநேகம் தடவை, உங்கள் கண்ணீரால் நிரப்பப்படுகின்றது.

அது எப்படி வேறு விதமாக இருக்கமுடியும்? எவ்வளக் கெவ்வளவு வருத்தம், உன் உயிர்நாளங்களில் ஊடுருவிப் பாய்கின்றதோ, அதன் அளவு, உன்னால் மகிழ்ச்சியைக் கொள்ளமுடியும் : கொண்டாட முடியும். நீ மதுவை கோப்பையில் குடிப்பதற்காக வைத்திருக்கின்றாயே, அந்த கோப்பை குயவனின் சூளையில் சுடப்பட்டது என்பது உனக்குத் தெரியும் அல்லவா?

உன் உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்கும் குழல், கத்தி யினால், சுரண்டப்பட்டு செப்பனிடப்பட்ட மரம் அல்லவா?

ஞானி

நீ மகிழ்வுடன் இருககும்பொழுது, உன் ஆழமான இதயத்தை உற்றுப்பார்.

நீ அங்கே காண்பாய், எது உனக்கு வருத்தத்தைக் கொடுத்ததோ, அதுவே தான் மகிழ்ச்சியையும் கொடுக் கிள்றது என்று: நீ வருத்தத்துடன் இருக்கும்பொழுது, மீண்டும் உன் இதயத்தை உற்றுப்பார். உண்மையில், எது உன் மகிழ்ச்சியைக் கொடுத்ததோ, அதற்காகவே நீ அழுகின்ருய் என்பதைத் தெரிந்துகொள்வாய்.

உங்களில் சிலர் சொல்லுவார்கள், "மகிழ்ச்சி தான் வருத்தத்தைவிட சிறந்தது", மற்றும் சிலர் சொல்லு வார்கள், "இல்லை, வருத்தம் தான் சிறந்தது", என்று. நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லுகிறேன், "அவைகள் பிரிக்க முடியாதவை" இரண்டும் சேர்ந்து தான் வருகின்றன. ஒன்று மேசை மேல், உன்னுடன் உட்கார்ந்து இருக்கும்பொழுது, மற்ருென்று, படுக்கையில் உனக்காகக் காத்திருக்கின்றது.

நிச்சயமாக நீ, ஒரு சமன் தராசைப் போல், மகிழ்ச்சிக்கும் வருத்தத்திற்கும் இடையே தொங்கவிடப்பட்டு இருக்கின்ருய். மகிழ்ச்சியும், வருத்தமும் இல்லாமல், நீ செயல்படும்பொழுது தான், அமைதியாகவும் நியாயவுணர்வுடனும் இருக்க முடியும்.

ஞானி

கஜானாவின் முதலாளி, கஜானா உரிமையாளன் அவனுடைய பொன், வெள்ளிகளை எடைபோடும் பொருட்டு, உன்னைத் தூக்குகிறான். அதற்கு உன் மகிழ்ச்சி அதிகப்படுவானேன் அல்லது உன் துக்கம் குறைவானேன்?

★

ஒரு கொற்றன், மேஸ்திரி முன்வந்து கேட்டான் :

வீடுகளைப் பற்றிச் சொல்லுங்கள் :

அவன் பதில் சொன்னான் :

நகர சுவர்களின் எல்லைகளுக்குள், ஒரு வீட்டை நிர்மாணிக்கும் முன், உங்கள் கற்பனைகளைக் கொண்டு, பாலைவனத்திலே ஒரு மலர்ச்சோலையை உண்டாக்குங்கள்.

மாலை வேளைதன்னில், வீடு திரும்புவதைப் போல் உங்களுக்குள், ஒரு அலைபவன் சமதூரத்தில் தனியாகவே இருக்கிறான்.

உங்கள் வீடு என்பது, உங்கள் பெரிய உடல். சூரிய ஒளியில் அது வளர்ந்து, இரவின் அமைதியில் அது தூங்குகின்றது. அது கனவு காணாமல் இருப்பதில்லை. உன்னுடைய வீடு கனவு காண்பது இல்லையா ?

கனவு கண்டுகொண்டே, நகரத்தை விட்டு ஒரு சோலைக்கு அல்லது குன்றின் உச்சிக்கு போய் சேர்வதில்லையா ?

நான் உங்கள் வீடுகளை எல்லாம் என் கையில், விதை விதைப்பவன் போல் காடுகளிலும், புல்தரைகளிலும் அவைகளை வீசியெறியட்டுமா ?

ஞானி

இந்த பள்ளத்தாக்குகள் எல்லாம் தெருக்களாகவும், பசும் புல்பாதைகள் உங்கள் உற்ற நண்பர்களாகவும், இந்த திராட்சை தோட்டங்களினிடையே, ஒருவரையொருவர் தேடி அலேயும் உங்கள் ஆடைகளில், மண்ணின் நறுமணத்தோடு வருவீர்களா!

ஆனல் இவைகள் எல்லாம் நடைபெறுவது எப்பொழுது: உங்கள் முன்னேர்கள், பயத்தில், உங்களே எல்லாம் வெகு அருகே சேர்த்து இருக்கின்ருர்கள். அந்த பயம், சிறிது காலத்திற்கு நீடித்து நிற்கும்: இன்னும் சிறிது காலத்திற்கு, உங்கள் நகரத்து சுவர்கள் வயல் வெளிகளினின்று, உங்கள் வீடுகளேப் பிரித்து நிற்கும்.

ஆர்பிலீஸ் நகரத்து மக்களே! என்னிடம் சொல்லுங்கள்: இந்த வீடுகளில் என்ன தான் வைத்திருக்கின்றீர்கள்! நீங்கள் எதைத் தான், மூடியக் கதவுகளேக் கொண்டு, பாதுகாத்து வைக்கின்றீர்கள். உங்கள் சக்தியை வெளிப் படுத்தும் அமைதியெனும் சலனமில்லாத அவ்வேகம் உங்களிடம் இருக்கின்றதா?

உள்ளத்தின் உயர் எண்ணங்களே இணேத்திடும், ஒளிரும் பாலங்களாகத் திகழும் நினேவுகள் உங்களிடம் இருக்கின்றனவா?

ஞானி

மரம், கல்லில் செதுக்கிய பதுமைகளினின்று, உங்கள் இதயத்தை புனிதமான மலைக்கு அழைத்துச் செல்லக் கூடிய அழகுணர்ச்சி உங்களிடம் இருக்கின்றதா? சொல்லுங்கள் இவைகள் எல்லாம் உங்கள் வீடுகளில் இருக்கின்றனவா?

அல்லது, வெறும் சுகம் தான் உங்களிடம் இருக்கின்றதா? சுகம், அனுபவிக்க வேண்டுமென்ற வெறி, திருட்டுத் தனமாக, உங்கள் வீட்டில் விருந்தினராக நுழையும்! பிறகு உபசரிப்பவனாக மாறும். அதன் பிறகு வீட்டு எஜமானனாகவே ஆய்விடும்.

அது உங்களைப் பழக்கப்படுத்தி விடும். உங்களைக் கொத்திப்பிடுங்கி, அபரிதமான உங்கள் ஆசைகளால். உங்களை வெறும் பொம்மைகளாக்கி விடும்.

அதன் கைகள் பட்டுபோன்று மிருதுவாக இருக்கும். ஆனால் அதன் இதயம் இரும்பைப் போல் கொடியது, உங்களைப் பரவசப்படுத்தித் தூங்க வைக்கும். ஏன் தெரியுமா? உங்கள் படுக்கை அருகில் நின்று, ஐம்புலன்களின் இன்பத்தை எடுத்து இயம்பவே! உங்கள் ஆறுவது அறிவை, அந்த காமவெறி எள்ளி நகையாடுகின்றது: அவைகளைக் காலிப் பாத்திரங்கள் என அடியில் கவிழ்த்து வைக்கின்றது.

ஞானி

உண்மையைச் சொல்லுமிடத்து, காமவெறி, ஆன்மீக உணர்வைக் கொலை செய்துவிட்டு, அந்த சவஹூர்வலத்தில் கடும் துக்கமுகத்தோடு கலந்து கொள்கின்றது.

ஆனால், திறந்தவெளிக் குழந்தைகளே, அமைதியில்லாமல் இருப்பவர்களே, உங்களை பொறியில் பிடிக்க முடியாது: உங்களைப் பழக்கவும் முடியாது.

உங்கள் வீடு நங்கூரமாக இருக்க முடியாது. பாய்மரமாகத் தான் விரியும். அது புண்ணை மறைக்கும் மெல்லிய படலமாக இருக்க முடியாது. ஆனால் கண்ணைக் காத்திடும் கண் இமையாகவே இருக்க முடியும்.

நீங்கள், கதவுகள் வழியாகச் செல்ல வேண்டுமென்று, சிறகுகளை மூடிக் கொள்ளாதீர்கள். கூரை இடிக்குமென்று, தலைகளைத் தொங்கப் போடாதீர்கள்: சுவர்கள் விரிந்து, விழுந்து விடுமென்று பயந்து, மூச்சுவிடக் கூட பயப்படாதீர்கள். உயிர் வாழ்வதற்காக, இறந்தவர்களால் எழுப்பப்பட்ட சமாதியில் நீங்கள் வசிக்கக்கூடாது.

உங்கள் வீடு மகத்தானதாகவும், பிரமாதமாகவும் இருந்தாலும், அது உன்னுடைய அந்தரங்கத்தை வெளியிடாமல் இருக்கக்கூடாது. உன் ஆசையையும் வைத்திருக்கக் கூடாது.

ஞானி

உன்னிடம் அளவிட முடியாதவொன்று இருக்கின்றதே, அது ஆகாயம் எனும் மாளிகையில் எங்கும் பரவி இருக்கின்றது. அதன் கதவுகள் காலையில் எழும் மூடுபனி. அதன் ஜன்னல்கள், இரவின் அற்புத இசையும், அமைதியுமே.

★

நெசவாளி கேட்டான்: ஆடைகளைப் பற்றிச் சொல்லுங்கள் என்று:

அவன் பதில் சொன்னான்:

உங்கள் ஆடைகள், உங்கள் அழகை அதிகமாக மறைத்து விடுகின்றன: ஆயினும் அழகில்லாதவற்றை, அவைகள் மறைக்கத் தவறி விடுகின்றன.

இந்த ஆடைகள் அணிவதால், உங்கள் அந்தரங்க உறுப்புகள் சுதந்திரமாக இருப்பதை நீங்கள் நாடினாலும் ஆடைகள் கட்டுத்தளையாகவும், பிணைக்கும் சங்கிலியாகவே அமைந்து விடுகின்றன.

இப்படி இருக்கலாமே! சூரிய ஒளியையும், வீசும் காற்றையும் அதிகமாக சருமத்துடனும் குறைவான ஆடை யுடனும் சந்திக்கலாமே! உயிர்மூச்சு சூரிய ஒளியிலும், வாழ்க்கையின் கரம் வீசுகின்ற காற்றிலும் இருக்கின்றன.

உங்களில் சிலர் சொல்லுகின்றார்கள்: "வடதிசைக் காற்று தான், நாம் அணியும் ஆடைகளை நெய்திருக் கின்றது," என்று: நான் சொல்லுகிறேன்: ஆம்: அது வடதிசைக் காற்று தான்.

ஞானி

ஆனுல் நாணம் என்பது தான் அவன் தறி. தசைகளைப் பண்படுத்துதல் என்பது தான் அவன் நூல். அவன் வேலை முடிந்தவுடன், அவன் காட்டில் சிரிப்பொலி எழுப்புகிருன்.

மறந்து விடாதே! அடக்கம் தான் அசிங்கமான கண்களுக்குத் தடையாக அமையும் கேடயம்.

அசிங்கமானவை அகன்றவுடன் அந்த அடக்கம் வெறும் சங்கிலியாக, பிணைப்பாக, உள்ளத்தின் துர்நாற்ற மாக மாறி விடும்? மீண்டும் மறந்து விடாதே! உன் வெறும் கால்களை ஸ்பரிஸிப்பதில் தான், பூமாதேவி, புளகாங்கிதம் அடைகின்ருள்: வீசும் காற்று, உன் கூந்தலுடன் விளையாடுவதையே விரும்புகின்றது.

★

ஒரு வியாபாரி கேட்டான்: வாங்குவதையும் விற்பதையும் பற்றிச் சொல்லவும்.

அவன் பதில் சொன்னான்.

உங்களுக்கு பூமி பலனைக் கொடுக்கின்றது. உங்கள் கைகளை எப்படி நிரப்புவது என்று தெரிந்துகொண்டால் உங்களுக்குத் தேவை என்ன என்பதே தெரியாது.

இயற்கை அள்ளிக்கொடுக்கும் பொருள்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம், நீங்கள் வளமையைக் காணலாம் பூரண திருப்தி அடையலாம். ஆனால் அந்த பரிமாற்றம் அன்பின் அடிப்படையிலும், பரிவுள்ள நியாய அமைப்பிலும் இல்லாவிட்டால், சிலர் பேராசை கொண்டு செயல்படவும் மற்றும் சிலர் பசியில் வாடவும் நேரிடும்.

கடலிலும், வயலிலும், பழத்தோட்டத்திலும் உழைப்பவர்கள், சந்தையில் நெசவாளிகளையும், குயவர்களையும், வாசனைத் திரவியங்கள் சேகரிப்பவர்களையும் சந்திக்கும் பொழுது, உங்களிடமிருக்கும், தராசுகளைப் புனிதப்படுத்தி மதிப்புக்கு மதிப்பு எடை கணக்கிட, இயற்கைத் தெய்வத்தை வேண்டி நில்லுங்கள்.

ஞானி

வெறும் கையுடன் சந்தைக்கு வருபவர்களைத் தொந்தரவு செய்யாதீர்கள் : உங்கள் பேரத்தில் அவர்களால் ஈடுபட முடியாது. உங்கள் உழைப்புக்கு ஈடாக, வார்த்தைகள் தான் அவர்களால் நல்கிட முடியும்.

அப்படிப்பட்ட மனிதர்களுக்குச் சொல்லுங்கள் : “எங்களுடன் வயல்வெளிக்கு வாருங்கள் அல்லது எங்கள் சகோதரர்களுடன், கடலுக்கு வாருங்கள். அங்கே உங்கள் வலையை விரியுங்கள். ஏனெனில், நிலமும் கடலும் எங்களுக்குப் போலவே, உங்களுக்கும் வளம் கொழிக்கும்”

அங்கு பாடகர்களும், நாடோடிகளும், குழல் ஊதுபவர்களும், வருவார்கள். அவர்களுக்கு வித்தைகள் மட்டுமே தெரியும்.

அவர்களும் பழங்களையும் வாசனைத் திரவியங்களையும் சேர்ப்பவர்களே ! அவர்கள் கொண்டு வருவது மானசிகமானவை. கனவுலகில், சஞ்சரிப்பவை, அவைகள் உங்கள் உள்ளத்திற்கு உடையாகவும், உணவாகவும் அமையும்.

நீங்கள் சந்தையை விட்டுச் செல்லுமுன், யாரும் உங்கள் இடத்தை விட்டு வெறும் கையுடன் செல்லும்படி அனுமதிக்காதீர்கள்.

ஞானி

உங்கள் அடிமட்டத்தில் இருப்பவர்களின் தேவைகள் பூர்த்தியாகும் வரை, இயற்கை தெய்வம், அமைதியாக காற்றினில் தூங்காது.

★

அந்த நகரின் நீதிபதியொருவர் முன்னுல் வந்து கேட்டார் :

" எங்களுக்குச் சொல்லுங்கள், குற்றங்கள், தண்டனை களைப் பற்றி "

அவன் சொல்லலுற்ருன் :

" ஒருகதியில்லாமல், உன் ஆத்மா அங்கும் இங்கும் காற்றினிலே அலையும்பொழுது நீ, தனியாக, எந்தவித கட்டுப்பாடும், கவனிப்பும் இல்லாதபொழுது, பிறருக்கும், ஆதலின் உனக்கும் தவறு இழைக்கின்ருய் !!

" அந்த இழைத்த தவறுக்கு, நீ, சர்வேஸ்வரன் (எல்லா கிருபைகளும் பெற்றவன்) வாசலில், கதவைத் தட்டி, சற்றும் கவனிப்பாரற்று, காத்திருக்க வேண்டும். உன் தெய்வீகத்தன்மை, பெருங்கடலைப் போன்றது.

அது எப்பொழுதும் அசுத்தமாகாமல் இருக்கின்றது.

அந்த தெய்வீகத் தன்மை ஈதர் போன்றது. (சக்தி ஊடகம் போன்றது. எங்கும் பரவி இருக்கின்றது. அது சிறகு உள்ளவர்களை (மனம் உள்ளவர்களை) உயர்த்து கின்றது. சூரியனைப் போல், உன் தெய்வீகத் தன்மை ஒளிருகின்றது.

ஞானி

ஒரு மர நாயின் விதிமுறைகள் அதற்குத் தெரியாது. அதைப் பாம்பின் பொந்தில் தேடுவதுமில்லை.

ஆனல் அந்த தெய்வீகத் தன்மை, தனியாக உன் செய்மை (Being) யில் இருப்பதும் இல்லை.

உன்னிடம், அதிகம் மனிதத் தன்மை இருக்கின்றது. ஆனல் இன்னும் முழு மனிதத் தன்மை உருவாகவில்லை.

ஆனல் ஒரு உருவம் இல்லாத சிறுமை மனிதன், தெளிவுபெற, மூடுபனியில் இன்னும் தூக்கம் கலையாமல் அலைந்து கொண்டு இருக்கின்ருன். ஆனல் உன்னில் உள்ள மனிதனைப் பற்றிப் பேசுகிறேன்.

ஏனெனில் அது அவன் செய்கிருன். உன்னில் உள்ள தெய்வீகத் தன்மையும் அல்ல. உன்னுள் அடங்கியிருக்கும் சிறுமை மனிதனும் அல்ல. குற்றத்தையும், அதற்கேற்ற தண்டனையும் அறிவது அந்த மனிதனே!

அநேகம் தடவை நீங்கள் பேசுவதை நான் கேட்டிருக்கின்றேன் : குற்றம் செய்பவன் உங்களில் சார்ந்தவன் இல்லையென்றும், அவன் வேறு புதியவன் என்றும், உங்கள் உலகத்தில் புகுந்து தொந்தரவு கொடுப்பவன் என்றும் நீங்கள் நினைக்கின்றீர்கள்.

ஞானி

மனிதனே! உங்களிடம் தர்மம், சத்யம். நியாயம் எனும் உணர்வு ஒரு உயர் கட்டத்தில் இருக்கின்றது: அஃதே போல், அதர்மம், அசத்யம், அநியாயம் என்னும் உணர்வு அதம கட்டத்தில் அடங்கிக் கிடக்கின்றது.

புனிதனும் சத்யசீலனும் அந்த உயர்வுக்கு மேல் அதிகம் எட்ட முடியாது. துன்மார்க்கனும், பலவீனம் உடையவனும் அந்த அதமகட்டத்தின் கீழ் இறங்க முடியாது.

ஒரு இலை, பழுப்பாக, மஞ்சள்ாக மாறுவது ஒரு தனி நிகழ்ச்சி இல்லை. அந்த மரம் முழுதும், மௌனமாக, அதைச் செய்வதில், மாற்றுவதில் பங்கு கொண்டிருக் கின்றது. இதை அது, முழுதும் அறிந்திருக்கின்றது. ஆகவே குற்றம் புரிபவன், உங்கள் எல்லோருடைய இரகசிய ஒப்புதல் இன்றி ஒன்றும் செய்ய முடியாது.

உங்கள் தெய்வீகத் தன்மையை நோக்கி, ஒரு ஊர்வலம் நகருவதைப் போல், நீங்கள் எல்லோருமே செல்லு கின்றீர்கள்.

நீங்கள்தான் வழியும், வழிபோக்கரும்.

உங்களில் ஒருவன் தவறி விழும்பொழுது, அவன்

உங்களுக்கு எச்சரிக்கையாகின்ருன். தடுக்கும் கல் வழியில் இருக்கின்றது என்று முன்னுல் வேகமாகவும், உறுதியாகவும் செல்லுகின்ருர்களே, அவன் அவர்களுக்காகவும் விழுகிருன்.

அதுமட்டுமா! அவன் அழுவதற்கு அவர்களும் காரணம். அவர்கள் அந்த கல்லே, பாதையினின்று அகற்றத் தவறி விட்டார்கள் அல்லவா? ஏன்! என் வார்த்தைகள் உங்கள் இதயத்தை மிகவும் கனக்கச் செய்கின்றதா? இன்னமும் சொல்ல இருக்கின்றது.

கொலே செய்யப்பட்டவன், தன் கொலேக்கு அவன் காரணம் இல்லாமல் இல்லே.

பொருளே இழந்தவன் (திருடப்பட்டவன்) அந்த திருட்டுக்கும், காரண கர்த்தஞக இல்லாமல் இருப்பதில்லே. அந்த குற்றத்தில் அவனுக்கும் பங்கு உண்டு.

நியாயம் பேசுபவர்கள், தர்மவான்கள் இவர்கள் மற்றவர்கள் செய்யும் அநீதிக்கும், பொறுப்பு ஏற்காமல் இருக்க முடியாது.

சுத்தமானவர்கள், அக்கிரமகாரர்களின் அசிங்கமான செய்கைகளுக்கும், முற்றிலும் பொறுப்பு ஆவார்கள். ஆம்! கொடுமைக்கு ஆளானவர்கள், அநேகமாக, தவறு செய்வதற்கும் ஆளாகின்ருர்கள்.

ஞானி

குற்றம் புரியாதவர்கள், சத்தியவான் என்று பெயரெடுத்தவர்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் அப்பாற்பட்டவர்கள், இவர்கள் சுமையை பாவம் அநேகமாக தண்டனை அனுபவிக்கின்ற அவர்கள் தாம், இவர்கள் சுமையையும் சேர்த்து சுமக்கின்றார்கள்: பாவம்.

உங்களால் நியாயத்தை, அநியாயத்தினின்றும், தர்மத்தை, அதர்மத்தினின்றும் பிரிக்க முடியாது. (உன்னால் நீதியை, அநீதியினின்றும் பிரிக்க முடியாது. நல்லதை கெட்டதினின்றும் அப்படியே பிரிக்க முடியாது.)

ஏனெனில், அவைகள் சூரியனுக்கு முன்னால், சேர்ந்து நிற்கின்றன. கறுப்பு நூலும், வெள்ளை நூலும் இணைந்து நெய்யப்பட்டு இருப்பது போல். கறுப்பு நூல் அறுபடும் பொழுது, நெசவாளி, முழு துணியையம் உற்று கவனிக்க வேண்டும். மேலும் தறியையும் சோதிக்கலாகிறான்.

உங்களில் யாராவது, சோரம் போன மனைவியை குற்றவாளி கூண்டில் ஏற்றும்பொழுது, அவள் கட்டிய புருஷனின் இதயத்தையும் எடை போட்டுப் பார்க்கட்டும். அவன் ஆத்மாவையும், சுத்தமான அளவு கோல்கொண்டு அளந்து பார்க்கட்டும்.

ஞானி

தவறு இழைத்தவனை தண்டிக்கும் ஒருவன், தவறு இழைக்கப்பட்டவனின் அந்தரங்கத்தையும் சற்று யோசித்துப் பார்க்கட்டும். சத்தியத்தின் பெயரில், நீங்கள் தண்டனை வழங்குவதாயின், அநீதியெனும் மரத்தை வெட்டி வீழ்த்தும் பொழுதினிலேயும், அதன் வேர்களைச் சற்று கவனியுங்கள்.

நிச்சயமாக நீங்கள் காண்பீர்கள். நல்லதும், கெட்டதும், பலனுள்ளவையும், அல்லாதவையும். இவைகளின் வேர்கள், பூமியின் அமைதியான இதயத்தில், ஆழத்தில், இணைந்து பின்னிக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

நீங்கள் நீதிபதிகள்: நியாய உணர்வு உள்ளவர்கள் உங்களில் யார் என்ன தீர்ப்பு அளிப்பீர்கள்? உலக நடத்தையில், உண்மையுள்ளவனாக இருந்து, உள்ளத்தில் திருடனாக இருப்பவனுக்கு?

அவனுக்கு என்ன தண்டனை ஏற்கும்: ஒருவன் தன் தசை கொடுக்கும் இன்பத்தை சிதைத்து அனுபவிக்காமல், அவன் ஆத்மா அழிந்து படும் நிலை எயதின்!

" அவன் மேல் எப்படி வழக்குத் தொடுக்க முடியும்? ஒருவன் செயலி ஏமாற்றுபவனாகவும், கொடுங்

கோலனுகவும் இருப்பின், அதே சமயம் அநீதியால் அவதி யுற்று, ஆத்திரப்பட்டு இருப்பான்.

அவர்களை எப்படி தண்டிக்க முடியும்? அவர்கள் துக்கம் மகத்தானவை: இதனுடன் ஒப்பிடுமிடத்து, அவர்கள் புரிந்த குற்றமோ மிகச் சிறிது.

எந்த சட்டத்திற்கு அடிபணிந்து, அதை அமுல் நடத்த விழைகின்றீர்களோ, அச்சட்டத்தின் நீதி, குற்றவுணர்சிசி யினுல், தாக்கப்படுபவனுக்கு, என்ன நியாயம் கொடுக்கும் ?

ஆனுலும், நீங்கள் நிரபராதிக்கு, துக்கத்தைக் கொடுக்கக் கூடாது. குற்றமுள்ளவனின் நெஞ்சிலிருந்து துக்கத்தை அகற்றவும் முடியாது.

எத்தவித வெளித்தூண்டுதலும் இல்லாமலும், மனிதர்கள் வேகம் உள்ளவர்கள் தெளிந்து, உணர்ந்து தங்களைத் தானே கண்டுகொண்டு, உண்மை அறியட்டும்.

நியாயத்தையும், நீதியையும் உணரும் ஆற்றல் உள்ள நீங்கள், செயல்களின் முழுமையையும், தெளிவாக நோக்கி தீர்மானம் செய்யவேண்டும்.

அப்பொழுதுதான் உங்களுக்குத் தெரியும்! நேராக நிமிர்ந்து நிற்கும் மனிதனும், கீழே விழுத்து, பரிதாபமாக கிடக்கும் மனிதனும், ஒரே மனிதன்தான் என்று.

ஞானி

அந்தி வெளிச்சத்தின் அற்ப இருளில் சிறுத்துக் குறுகி நிற்கும் மனிதனும், பகல் ஒளியில் பிரகாசிக்கும் மனிதனும் ஒருவனேயென்று.

கோயில் கட்டிடத்தின் உயர்ந்த மூலைக்கல், அதன் அடிமட்டத்தில் புதைந்திருக்கும் அஸ்திவாரக் கல்லிலிருந்து அதிக உயரத்தில் இல்லை.

★

பிறகு ஒரு வழக்கு உரைஞர் கேட்டார்:

" நம்முடைய சட்டத்தைப் பற்றிச் சொல்லுங்கள் எஜமானரே! "

அவன் பதில் சொன்னான்:

சட்டங்கள் போடுவதில் உங்களுக்கு உற்சாகம்!

அச்சட்டங்களை மீறுவதில் உங்களுக்கு மிக மகிழ்ச்சி.

கடற்கரையில், மிகப் பொறுமையாக மணல் வீடுகளைக் கட்டி, மீண்டும், மீண்டும் மகிழ்வுகொண்டு உடைப்பதைப் போல்!

" ஆனால், அப்படி மணல் வீடுகளை நீங்கள் கட்டும் பொழுது, மேலும், மேலும் கடல், மணல் கொண்டு சேர்க்கின்றது. அவைகள் அழிக்கப்படும்பொழுது, கடலும் உங்களுடன் சேர்ந்து கொக்கரிக்கின்றது.

உண்மையில், கடல் எப்பொழுதும், நிரபராதியுடன் சேர்ந்தே சிரிக்கின்றது!

ஆனால் வாழ்க்கை, கடல்போல் அமையாதவர்கள், என்ன செய்வார்கள்? பாவம்! மனிதன் செய்யும் சட்டங்களும் மணல் வீடுகள் அல்லவே!

ஞானி

ஆனல் யார் வாழ்க்கை கற்பாறைபோல் இருக்கின்றதோ அங்கெல்லாம், சட்டம் உளியைப்போல் பயன்படுத்தப்பட்டு அவர்கள், தங்கள் வாழ்க்கைய்யை, தங்கள் இஷ்டம்போல் அமைத்துக்கொள்கிருர்கள் ?

நடனம் செய்யும் வித்தைக்காரர்களை முடவன் வெறுக்கின்ருன் ?

தன்னை அழுத்தும் நுகத்த்டிதனை நேசிக்கும் ஒரு எருது, காட்டிலுள்ள மாயில்களையும், எல்க் மரங்களையும், வழி தவறி தவிக்கும் பிராணிகள் என்றும், எங்கோ முளைத்திடும் மரங்கள் என்று நினைக்கின்றதோ !

தன் தோல்தனை உரிக்க முடியாத நிலையில் ஒரு பாம்பு தோலை உரித்திடும் மற்றயவைகளைப் பார்த்து, நிர்வாணமாய் அலையும் வெட்கம் கெட்டவர்கள் என்று பரிகசிக்கின்றதோ !

ஒரு திருமணத்திற்கு, முன்கூட்டியே வந்திருந்து, வயிறு புடைக்க உண்டு. களித்துக் களைப்படைந்து, திரும்பும்பொழுது சொல்லுகின்ருனும் ; எல்லா விருந்துகளும், நியாயமற்றவை ; விருந்து உண்பவர்கள், சட்ட விரோதச் செயல் புரிகிருர்கள் என்று !

அவர்களைப்பற்றி இதைத்தான் சொல்ல முடியும் ! அவர்களும் சூரிய ஒளியில் நிற்கின்ருர்கள் : ஆனல் வீசும் ஒளிக்

ஞானி

கதிர்களுக்கு. புறமுதுகிட்டு நிற்கின்றார்கள் :

அப்படிப்பட்டவர்கள், தங்கள் நிழல்களை மட்டுமே பார்க்கின்றார்கள் : ஆம் : அவர்களுக்கு தங்கள் நிழல்கள்தான் சட்டங்கள் : அவர்களுக்குச் சூரியன் எப்படிப் பொருள்படுகின்றான் தெரியுமா ! ஒளி உதிர்க்கும் நிழல்களின் கோப்பு ?

அதே சட்டங்களை அங்கீகரித்துக்கொண்டு, அதன் சுவடுகளைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொண்டு, அவைகளை தங்கள் வரைச் செல்லாதவைகளாக்கிக்கொள்கின்றார்கள்.

ஆனால், சுடும் சூரிய ஒளியை எதிர்கொண்டு, விரையும் உங்களுக்கு, தரையில் விழும் நிழல்களின் உருவங்கள், உங்களை எப்படித் தடுத்து நிறுத்த முடியும் ?

வீசும் காற்றுடன் பயணம் செய்யும் உங்களுக்குத், திசை காட்டி எப்படி வழிகாட்டியாக இயங்க முடியும் ?

மனிதனின் சட்டம் உங்களை எப்படிக் கட்டுப்படுத்தும்' யாருடைய சிறைவாயிலிலும், உங்கள் நுகத்தடியை உடைக்காத பொழுது !

நீங்கள் எந்த சட்டத்திற்குப் பயப்பட வேண்டும், ஆடிப்பாடி நடனம் புரிந்து, எந்த மனிதனின் இரும்புச் சங்கிலியின் மீதும், மோதிக் கொள்ளாதபொழுது ?

ஞானி

யார் உங்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியும், உங்கள் ஆடைகளைக் கிழித்து, யார் வழியிலும் பரப்பாத பொழுது ?

ஆர்பீலீஸ் பெருமக்களே! மேளங்களைத் தட்டாமல் செய்து விடலாம் ! வீணையின் கானம் கேளாமல் இருக்க அதன் இயக்கக் கம்பிகளையும், தளர்த்தி விடலாம் !

ஆனல், வானம்பாடியை பாடாமல் இருக்க உங்களால் உத்தரவிட முடியுமா ?

ஒரு பேச்சாளன் கேட்டான் :

" எங்களுக்குச் சுதந்திரத்தைப் பற்றிச் சொல்லுங்கள்" என்று.

அவன் பதில் சொன்னான்.

நகர்ப்புறங்களிலும், வீட்டிலும் எங்கும் உங்கள் சுதந்திரத்தை மிகவும் நேசிப்பதாகச் சொல்லி, அதை எப்பொழுதும் தொழுது, அங்கலாய்த்துக் கொள்வதை நான் பார்த்திருக்கிறேன்.

ஒரு கொடுங்கோலன்முன், தங்களைக் கொலையும் செய் வதற்குத் தயங்காதவன் முன். வணங்கி மண்டியிட்டு, தங்களைக் கேவலப்படுத்திக் கொள்ளும் அடிமைகளைப் போல் :

ஆம்! நான் பார்த்திருக்கிறேன் : கோயில்களின் சோலைகளிலும். கோட்டைகளின் நிழல்களிலும், உங்களில் மிகச் சுதந்திரமானவர் என்று போற்றப்படுகின்றவர்கள் விடுதலையைத் தங்களை அழுத்தும் நுகத்தடியாகவும், செயல்பட முடியாதபடி கைவிலங்காகவும் அணிந்திருப்பதை:

மேலும் உங்களைப் பற்றி பேசும்பொழுது, என் இதயம் இரத்தம் வடிக்கின்றது. நீங்கள் எப்பொழுது சுதந்திரமாக, செயல்பட முடியும் தெரியுமா?

விடுதலையைத் தேடி அலையும் எண்ணம் கூட, உங்களுக்குப் பெருத்த வேதனையாகவும், பெருஞ்சுமையாக இருக்கும்பொழுது.

விடுதலை தான் தன் குறிக்கோள் என்றும், அதுதான் முழுமையான நிறைவு என்றும் பேசுவதை நிறுத்தும் பொழுது:

நீங்கள் எப்பொழுது, நிச்சயமாக, சுதந்திரமாக செயல் பட முடியும் தெரியுமா? உங்கள் நாட்கள், கவலைகள் இல்லாமல் இருக்கக்கூடாது.

உங்கள் இரவுகள் தேவைகளாலும், ஏக்கமுள்ள பெருமூச்சுகளாலும் நிரம்பி இருக்கவேண்டும்.

ஆனால் எப்பொழுது, விடுதலை இன்பத்தை பரிபூர்ணமாக அனுபவிப்பீர்கள் தெரியுமா?

இந்தப் பொருள்கள், உங்களைச் சுற்றி, வாழ்க்கையை நெறிக்கும் பொழுதும், உங்களால், அவைகளின் கோரப் பிடியினின்று, சற்றும் சலனப்படாமல், சுத்தமாக ஆசைக் கட்டுப்பாடு எதுவும் இல்லாமல், வெளிப்படும்பொழுது: வாழ்க்கையைப் புரிந்துகொண்டு, செயல்படும் வேளை தன்னில், இதுதான் உச்சக்கட்டம் என்று, நீங்கள்

ஞானி

உங்களைச் சுற்றிப் பிணைத்துக் கொண்டிருக்கும் சங்கிலிகளை உடைத்தெறிந்தாலொழிய, எப்படி உங்கள் இரவுப் பகல் களினின்று, வெளியேற முடியும்!

உண்மையைச் சொல்லுமிடத்து, நீங்கள் எதைச் சுதந்திரம் என்று சொல்லி அழைக்கின்றீர்களோ, அது தான் உங்களை அடியோடு முற்றிலும் பிணைத்து அடிமையாக்கும் விலங்குகள். ஆனுல் அதன் பிணைப்புகள் சூரிய ஒளியில், பிரகாசமாக மின்னி உங்கள் கண்களைக் கூசச் செய்கின்றன.

விடுதலை என்பது என்ன தெரியுமா? நீங்கள் விடுதலைப் பெறவேண்டின், உங்களின் சுயதன்மையின் சில சிறுபகுதி களை விட்டொழித்தாலே போதுமானது?

நீங்கள் நியாயமில்லாத ஒரு சட்டம் அமுல்படுவதை தடுக்க முற்படும் பொழுது, அந்த சட்டம் உங்களால் ஏற்படுத்தப்பட்டது. உங்கள் நெற்றியிலேயே பொறிக்கப் பட்டுள்ளது என்பதை மறந்து விடாதீர்கள்.

சட்டப் புத்தகத்தைக் கொளுத்துவதாலும், உங்கள் நீதிபதிகளின் நெற்றியைக் கழுவுவதாலும், பெருங்கடல் நீரையே, கொட்டுவதாலும், உங்களால் அதை அழிக்க முடியாது.

ஞானி

ஒரு கொடுங்கோலனை, அவன் சிம்மாசனத்தினின்று, வீழ்த்துவதற்கு முன்னால், முதலில் உங்கள் உள்ளத்தில் நிர்மாணிக்கப்பட்டு இருக்கும் அவன் சிம்மாசனம் அழிக்கப் பட்டு இருக்கின்றதா? என்று பார்த்துக்கொள்ளுங்கள்.

எப்படி ஒரு கொடுங்கோலனால், சுதந்திர புருஷர்களையும் சுயமரியாதையுள்ளவர்களையும் ஆளமுடியும்? ஏன் தெரியுமா? அவர்கள் விடுதலைத் தன்மையில், ஒரு கொடுமையிருக் கின்றது. அவர்கள் வேண்டும் மரியாதையில், அவமானமும் சேர்ந்திருக்கின்றது.

அது ஒரு கவலையாயின், உங்களால் உதறித் தள்ள முடியுமா? ஆனால் அத்தக் கவலை உங்களாலேயே, விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டது. உங்கள் மேல் சுமத்தப்பட்டது அல்ல.

உங்களால் விரட்டியடிக்கக் கூடிய பயமாக இருக்கு மாயின், அந்த பயத்தின் இருப்பிடம் உங்கள் இதயம்தான். அது, பயம் கொள்பவனின் கையில் இல்லை.

உண்மையில், எல்லாம் எப்பொழுதும் மாறுத அரவணைப்பில், உங்கள் செய்மையினுள்ளே இருக்கின்றன. ஆசைப்படுவதும், அஞ்சுவதும், வெறுப்பதும், விரும்பிப் போற்றப்படுவதும், வேட்டையாடப்படுவதும், அத்தாக்கு

தலினின்று தப்பிப் பிழைப்பதும், எல்லாம் அங்கே தான் செயல்படுகின்றன.

இவைகள், உங்களின் உள்ளே, ஒளியும் இருளும் பிணைந்திருக்கும் ஜோடிகள் போல் உலவுகின்றன.

அந்த நிழல் மறையும் பொழுது, அதுமுற்றிலும் மறையும்பொழுது, மீதமிருக்கும் ஒளி, மற்றுமொரு ஒளிக்கு, நிழலாகி விடுகின்றது.

ஆகவே, உங்கள் விடுதலை, அதன் விலங்குகளை முறித்துக் கொள்ளும்பொழுது, மிகப் பெரியதொரு, சுதந்திரத்திற்கு, அது விலங்காக அமைந்துவிடுகிறது.

★

அந்த சந்நியாசிநி மீண்டும் கேட்டாள்: அறிவு காமம், (இச்சை, ஐம்புலன் கொடுக்கும் வெறி) இவைகள் பற்றிச் சற்று சொல்லுங்கள் என்று:

அவன் பேசலுற்ருன்:

அநேகமாக, உன் அந்தரங்கம் அடிக்கடி போர்க்கள மாகின்றது. அப்போரில் உன் பகுத்தறிவும், நியாய வுணர்வும் ஒரு பக்கமும், உன் வெறியும், தாபமும் மற்ருெரு பக்கமும் அணிவகுத்து நிற்கின்றன. பூசல் இவற்றினிடையே தான்.

உன் அந்தரங்கங்களில் புகுந்து, அங்கு அமைதி ஏற்படுத்தும் பணியை நான் செய்ய முற்படலாமா? உன்னில் புதைத்திருக்கின்ற சண்டை சச்சரவு போட்டி மனப்பான்மைகளை, ஒருமுகப்படுத்தி, இனிய கானமாக மாற்றவேண்டும் என்பது என் அவா!

நான் என்ன செய்யமுடியும்? நீங்கள் அமைதியை நாடி உணர்ந்து, பெரும் ஆற்றல் அடையத் தெரிந்து கொள்ளவேண்டும்: இல்லை: அதுமட்டும் போதாது: உங்கள் அடிப்படைத் தன்மைகள் எல்லாவற்றையும் வுணர்ந்து, நேசிக்கத் தெரியவேண்டும்.

ஞானி

கடல் கடந்து எங்கும் அலையும் உங்கள் ஆத்மாவின் பாய்மரம் தான் உங்கள் ஐம்புலன் ஆசைகள்: உங்கள் பகுத்தறியும் சக்தியே உங்கள் நங்கூரம்.

உங்கள் பாய்மரம் அல்லது நங்கூரம் இவைகளில் ஏதாவது ஒன்று, உடையுமானல், நீங்கள் அலைகடலில் அங்கும், இங்கும் அலைந்து அவதியுறுவீர்கள்: அல்லது நடுக்கடலில் வழி இழந்து, ஒரே இடத்தில் தத்தளிப்பீர்கள்.

பகுத்தறிவு மட்டும் செயல்படுமானல், அது உங்களை, ஒரு எல்லைக்குள் அடக்கிவிடும். ஐம்புலன்கள் ஆசைப்படி செயல்பட்டால், அது தீக்கதிர் என ஒளிர்ந்து, உன் நாசத்தை உண்டாக்கும்.

ஆகவே உன் அந்தராத்மா, உன்னுடைய பகுத்தறிவை இனிமை கானம் பொழியும்படி, ஐம்புலன்களின் இச்சை இயலும் உச்சகட்டத்திற்கு உயர்த்தட்டும்.

உன் அந்தராத்மா, ஐம்புலன்களின் இச்சைகளை, பகுத்தறிவு கொண்டு பண்படுத்தட்டும். உன் இச்சைகள், தினந்தோறும் எழுந்து, கிளர்ந்து, எரிந்து அடங்கட்டும். காலத்தைக் கடந்து நிற்கும் ப்யனிக்ஸ் பறவை, எப்படி தன் சாம்பலை மீறி எழுந்து, சாவைத் தாண்டி நிலைத்து இருக்கின்றதோ, அதைப் போல.

ஞானி

உங்களின் நியாயஉணர்வும், ஆசைப் பசியும், உங்கள் அபிமானத்திற்குப் பாத்திரமான (உங்கள் வீட்டிற்கு வந்திருக்கும்) இருவிருந்தினர்கள்.

நிச்சயமாக, ஒரு விருந்தினரை, மற்றைய விருந்தினருக்குக் கொடுப்பதைவிட அதிக முக்கியத்துவம் கொடுக்கமாட்டீர்கள். எவன் ஒருவன், ஒரு விருந்தினருக்கு அதிக கவுரவம் கொடுத்து, உபசரிக்கின்ருனே, அவன் இரு விருந்தினரின் நம்பிக்கையும் இழந்து நிற்பான்.

மலைகளிடையே, உயர்ந்து பளிச்சென்று நிற்கும் பாபலர் மரங்கள் தரும் குளிர்ந்த நிழலில் உட்கார்ந்து, தூரத்து வயல்களும், பசும்புல் தரைகளும், அளிக்கும் அமைதியில், அந்த அற்புத மௌனத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் வேளையில் உன் இதயம், சொல்வதைக் கேள் : "கடவுள், பகுத்தறியும் தன்மையில், எப்பொழுதும் இருக்கிருர் !"

பெரும்புயல் வீசும்பொழுது, பேய்க் காற்று காட்டினை கட்டோடு குலைக்கும்பொழுது, இடியும், மின்னலும், வானத்தின் வலிமையை பறைசாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, அப்பொழுதும், உன் இதயத்தில், மரியாதை யுடனும், அடக்கத்துடனும் ஒலிக்கட்டும் : "கடவுள் ஆவேசத்துடன் செயல்படுகிருர்" என்று

ஞானி

கடவுளின் உலகில் நீ ஒரு மூச்சு: ஆம்! அவன் காட்டில் நீ ஒரு இலை: நீ பகுத்தறிவு கொண்டு, அமைதி அடையவேண்டும். உன் ஐம்புலன்களின் இச்சைக்கு ஏற்ப செயல்பட்டு, உன் ஆசைகளை நிர்வகித்துக் கொள்ள வேண்டும்.

★

ஒரு பெண்மணி பேசலுற்ருள் :

"துன்பத்தைப் பற்றிச் சொல்லுங்கள்"

அவன் சொன்னுன் :

உன் அறிந்துகொள்ளும் தன்மை, புரிந்துகொள்ளும் சக்தி, 'ஞானம்' எனப்படும். இதை மூடியிருக்கும் போர்வை ஓடு, உடையும்பொழுது ஏற்படும் பாவம் தான் 'துன்பம்' எனப்படும்.

ஒரு பழத்தை மூடியிருக்கும் தோல், அதன் உட்பொருள் சூரியனை அடைய வேண்டி, எப்படி உடைகின்றதோ, அதைப் போல், நீங்கள் துன்பத்தை உணருகின்றீர்கள். உன் வாழ்க்கையில், தினந்தோறும், நிகழும் அற்புதங்களை, உன் இதயம் அறியுமிடத்து, உன் வேதனை, உன் ஆனந்தத்தைவிட, அற்புத உணர்ச்சியில் அப்படியொன்றும் குறைவாக இருக்காது. எப்படி வயல் வெளிகளில், பருவகாலங்கள் மாறி வருவதை, நீ ஏற்றுக்கொள்கின்ருயோ அப்படியே மாறி வரும் மனோ நிலையையும் நீ ஏற்றுக் கொள்ளவேண்டும்.

உன் துக்கம், குளிர்காலம் எனவே, உன்னை வதைக்கும் பொழுது, நீ சலனமில்லாமல், அமைதியாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஞானி

உன் துக்கம் உன்னுலேயே உண்டாக்கப்பட்டது. அதற்கு நீயே காரணம்.

ஒரு கசப்பான மருந்து, உன் உள் மருத்துவனுகப் பணிபுரிந்து, உன்னைக் குணப்படுத்துகின்றது.

ஆகவே, அந்த மருத்துவனிடம் நம்பிக்கை கொள்: ஆகவே, அலட்டிக் கொள்ளாமல், அமைதியாக ஏற்றுக் கொள்ள கற்றுக்கொள்: பார்வைக்கு, அது கனமாகவும், கடினமாகவும் இருக்கும். ஆனுல் ஆதரவு கொடுக்கும் அன்பின் கரம் அது என்று நீ உணரவேண்டும். உன்னுல் உணரமுடியாத, காணமுடியாத சக்தி அதை இயக்கு கின்றது. அவன் கொண்டுவரும் கோப்பை, உன் உதடு களுக்கு, எரிச்சலூட்டும்படியாக இருந்தாலும், அது இறைவன் எனும் குயவனுல் உருவாக்கப்பட்டது. அவன் புனிதக் கண்ணீரால் நனைக்கப்பட்டது.

★

ஒரு மனிதன் கேட்டான்:

"சுயஅறிவுதனைப் பற்றிச் சற்று சொல்லுங்கள்", என்று . அவன் பதில் இறுத்தான்.

இரவு பகல்களின் இரகசியங்களை, உங்கள் இதயம் அமைதியாக இருக்கும்பொழுது உணரும்.

ஆனால், இதயத்தின் அந்தரங்கங்களை அறிந்துகொள்ள வேண்டி, உங்கள் காதுகள் கூர்மையாகி காத்திருக்கின்றன.

எண்ணங்களில், எப்பொழுதும் நீங்கள் அறிந்தவற்றை வார்த்தைகளில் தெரிந்துகொள்ள வேண்டும்.

உங்கள் கனவுகளின் கருவூலத்தை, விரல்களால் தொட்டுத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு, அறிந்திருக்க வேண்டும். கனவும், செயலும்–உறவு நெருக்கமாக இருக்க வேண்டும்.

இதை நன்கு நீங்கள் அறியவேண்டும். அடைந்து கிடக்கும் உங்கள் அந்தராத்மா வெறும் ஊற்று: எழுந்து, ஆர்ப்பரித்து, ஓடிச்சென்று, பெருங்கடலை அடையவேண்டும்.

ஆழங்காணமுடியாத, எல்லையில்லா பொக்கிஷங்கள் அறிவும், அனுபவமும், அப்பொழுதுதான், உங்கள் கண்களுக்குத் துலங்கும்.

ஞானி

ஆனுல், உங்களுக்குத் தெரிந்திராத, பொக்கிஷங்களை, அளந்திட அளவுகோல் இல்லை, உங்கள் அறிவின் ஆழத்தை, அளவுகோல் கொண்டோ, அல்லது குரல் ஒலியைக் கொண்டோ அளந்திட முற்படாதீர்கள். ஏனெனில், "நான்" என்பது எல்லையிலா, அளவிட முடியாத ஒரு கடல்.

"அந்த உண்மையைக் கண்டு கொண்டேன்", என்று கர்வப்படாதீர்கள். "ஒரு உண்மை தென்பட்டது", என்று அடக்கமாக இருங்கள். "அந்தராத்மாவின் வழியை முற்றிலும் உணர்ந்து விட்டேன்", என்று அறைகூவாதீர்கள். "என் வழியில் வந்த ஆத்மாவை, கண்டு கொண்டேன்", என்று இருங்கள்.

ஏனெனில் ஆத்மீக உணர்வு எல்லா வழியிலும் இருக்கின்றது.

ஒரே பாதையில் தான், ஆன்மாவை உணரமுடியும் என்பதில்லை. ஆனுலும் புதர்கள் போல் எங்கும் மண்டி யிட்டும் இருப்பதில்லை.

ஆன்மா, தாமரையின் எண்ணிலா இதழ்கள் போல், தானுகவே, எங்கும் விரிகின்றது.

★

பிறகு ஒரு ஆசிரியர் கேட்டார்:

"போதனையைப் பற்றிச் சொல்லுங்கள்"

அறிவின் கருவூலத்தில், உள்ளத்தின் அடிப்படையில் முன்னமேயே, அமிழ்ந்திருக்கும் அனுபவக் கொத்துக்களைத் தான், ஒருவனால் வெளிப்படுத்த முடியும். (அரைகுறை அறிவு, அனுபவமாக வெளிப்படாது.)

கோயிலின் பிராகாரத்தில், நடக்கும் ஆசிரியர், தன் சீடர்களுக்கு, அறிவு எதுவும் புகட்டுவதில்லை. ஆனால் தன் அசைக்க முடியாத நம்பிக்கையையும், அன்பையும் பரிவுடன் ஊட்டுகிறார். அவர் புத்தி கூர்மையுடையவராயின் தன் அறிவுலகத்திற்கு, உங்களை அழைத்துச் செல்வதில்லை. உங்கள் உள்ளத்தின் அந்தரங்கத்திற்கே வழிகாட்டுகிறார்.

ஒரு வானியியல் ஆராய்ச்சியாளர், தான் வானத்தைப் பற்றித் தெரிந்து கொண்டதைப் பற்றி பேசலாம். ஆனால் அவர் உள்ளத்தின் அனுபவத்தைப் பற்றி வார்த்தைகளால் வெளிக் கொணர முடியாது.

ஒரு பாடகர், எங்கும் பரவி இருக்கின்ற இசை இன்பத்தை இராகங்களில் திரட்டிக் கொடுக்கலாம்.

ஆனால், அந்த இசையை அனுபவிக்கக் கூடிய செவியையும், அந்தக் குரலை இரசிக்கக் கூடிய பண்பையும் அவரால் கொடுக்க முடியாது.

எண்களின் அற்புதவுலகத்தின் பாண்டித்யத்தைப் பெற்ற ஒருவர், எடைகள், அளவுகள் பற்றிப் பேசலாம்: ஆனால் அவ்வினியவுலகுக்கு, உங்களை அழைத்துச் செல்ல முடியாது.

ஒரு அறிஞனின் கற்பனை உலகம், மற்றொருவனுக்கு கற்றுக் கொடுப்பதன் மூலம் வருவதில்லை, இயற்கைத் தன்மையை கடனாக பெற முடியாது. வாங்கவும் முடியாது.

கடவுளின் அறிந்திடும் சிந்தனையுலகில் ஒரு மனிதன் தனித்து நிற்கிறான்: ஒவ்வொருவரின் அளவிலா சக்தியின் அனுபவம், அறிந்திடும் திறமை, அப்படியே தனிமையானது இவ்வுலகின் உண்மையை, அறிந்துகொள்ளும் ஆற்றல் ஒவ்வொருவனுக்கும் வேறானது. தனித்தன்மை வாய்ந்தது.

★

ஒரு இளைஞன் கேட்டான்:

நட்பு என்பது என்ன?"

அவன் பேச ஆரம்பித்தான்.

உன் நண்பன் என்பவன் உன்களம்: வயல்: அங்கு அன்பெனும் விதை விதைத்து, நன்றியெனும் அறுவடையைச் செய்கிறாய்:

அவன் உன் அறிவுப் பசியைப் போக்கும் விருந்தாக அமைகின்றான்: உன் பயம் எனும் குளிரைப் போக்கும் வெந்தணல் ஆகின்றான்.

உன் உள்ளத்தில் பசி எடுக்கும்பொழுது நீ அவனை நாடுகிறாய். நீ அமைதியைத் தேடி அலையும்பொழுது, அவன் உன் புகலிடம்:

உன் நண்பன் உன்னிடம் உரையாடும்பொழுது, 'இல்லை' என்ற பயம் உன்னிடம் ஏற்படுவது இல்லை.

அவன் மௌனம் சாதிக்கும்பொழுது, உன் இதயம், அவன் இதயத்துடிப்பை உணராமல் இருப்பதும் இல்லை.

வேண்டும் என்று கேட்காத பெருமிதத்தில். வார்த்தைகளின் துணை எதுவுமின்றி, அந்த நட்புறவில், எல்லா எண்ணங்களும், எல்லா ஆசைகளும், எல்லா

எதிர்ப்புகளும், பிறந்து, பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. உன் நண்பனிடமிருந்து, விடைபெறும்பொழுது, நீ கவலைப்படுவதுமில்லை.

அவனிடம் நீ எதை மிகவும், நேசிக்கின்ருயோ, அவன் அருகில் இல்லாமல் இருக்கும்பொழுது, அதை நீ மிகவும் தெளிவாக உணருகின்ருய். சமவெளியினின்று, மலை மிக சுத்தமாகத் தெரிவதைப் போல்.

ஆத்மிக உறவு இறுகுவதைத் தவிர, நல்ல நட்பில், வேறு நோக்கம் எதுவும் இருப்பதில்லை. இருக்கவும் முடியாது.

ஏனெனில், நேசம் என்பது, தன் உட்பொருளை கண்டு அறிவது இல்லாமல், வேறு இல்லை: மற்றவை நேசமும் அல்ல: அவை வேட்டையாடும் வலை: பலனில்லாதவை தான் அதில் சிக்கும்.

உன்னிடம் உள்ள் மிகச் சிறந்தவை, உன் நண்பனுக்காக இருக்கட்டும்.

உன் உள்ள அலையின் முகமாய் மட்டும், அவனுக்குத் தெரியவேண்டியிருப்பின், அதன் வெள்ளம், வேகம் இதையும் அவன் அறிந்து கொள்ளட்டும். நேரத்தைக் கழிக்க மட்டும், உன் நண்பனை, நீ தேடியலையாதே!

ஞானி

வாழ்வு வளம்பெற அவன் நேசத்தை நாடு: இருவரும் இணைந்திருக்கும் நேரத்தில், வாழ்வின் சுவையை அனுபவிப்ப தாக இருக்கட்டும்.

உன் தேவையை அவன் பூர்த்தி செய்யட்டும்: உன் வறுமையை அவன் நிறைக்க வேண்டாம்.

உங்கள் நட்புறவின் இனிமையில், சுவையான சிரிப்பொலியும், இணையான இன்பப் பகிர்வும் இருக்கட்டும்.

இப்படிப்பட்ட, சிறிய விஷயங்களில் தான், பனித்துளிகளில் தான் நட்புறவின், காலைப்புத்துணர்ச்சியைப் பெறமுடியும்.

★

ஒரு அறிவாளி கேட்டான்: "பேசுதல்" பற்றிச் சொல்லுங்கள்

அவன் சொன்னான்:

நீ எப்பொழுது பேசுகிறாய் தெரியுமா? உன் நினைவுகளுடன், சிந்தனை செய்து, அமைதியில்லாமல் தவிக்கும் பொழுது, உன் இதயத்தின் தனிமைக்கு உன்னால் ஈடு கொடுக்க முடியாத நிலையில், உன் உதடுகளில் நீ உயிர் வாழத் தொடங்குகின்றாய்! நீ ஏற்படுத்தும் சப்தம் ஒரு மாற்றம்: திசை திருப்பும் பொழுதுபோக்கு.

நீ அதிகம் பேசும்பொழுது, சிந்தனை அங்கு பாதிக்கு மேல், சிதைக்கப்படுகின்றது. சிந்தனை என்பது வெளியில் உலவும் பறவை. அது வார்த்தையெனும் கூண்டில் அடைபடும்பொழுது எதனால் இறக்கைகளை மட்டுமே விரிக்க முடியும். ஆனால் சுதந்திரமாக பறக்க முடியாது.

உங்களில் பலர் வம்பு பேசுபவனைத் தேடி அலைகின்றீர்கள் பொழுதைக் கழிப்பதற்கு உங்களுக்குத் தனிமையில் இருக்க பயம்.

அந்தத் தனிமையின் அமைதி, உங்களின் சுயரூபத்தை முற்றிலும் வெளிப்படுத்துகின்றது. அதிலிருந்து விடுபடவே பேசித் திரியும் வழியைத் தேடுகிறீர்கள்.

ஞானி

அறிவும், முன்யோசனையும் இல்லாமல் பேசுகின்றவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் புரியாத உண்மைகளையும் பேசும் இயல்பு உள்ளவர்கள் இவர்கள்.

மற்றவர்கள் உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் தெரிந்து கொண்டவர்கள்: ஆனால், வார்த்தைகளில், அவர்கள் வெளிப்படுத்தமாட்டார்கள்: [அவசியம் இருந்தால் ஒழிய] இப்படிப்பட்டவர்கள் உள்ளத்தில் தான் ஆத்மீக சக்தி மோன அமைதியில் குடியிருக்கின்றது.

தெருவிலோ, அல்லது சந்தையிலோ, நீ உன் சிநேகிதனைச் சந்திக்கும்பொழுது, உன் உள் உறையும் ஆன்மீக சக்தி உன்னை பேசவைக்கட்டும்.

உங்கள் குரலில் புதைந்திருக்கும் குரல், அவன் செவியினுள்ள, உட்செவிக்குள் பேசட்டும்.

ஒயினின் (uine) சுவை, அதன் கோப்பையும் நிறமும் மறைந்த பிறகும் கூட, நாவில் தங்கியிருப்பதுபோல், அவனுடைய ஆத்மா உன் இதயத்தின் உண்மைகளைக் காத்திருக்கும்.

★

காலம்

ஒரு வான் இயல் நிபுணர் கேட்டார் :

எஜமானரே ! "காலம்" என்பது பற்றி சொல்லுங்கள்.

அவன் பதில் சொன்னான்.

அளக்க முடியாத, அளவு இல்லாத காலம் என்பதை, நீ அளக்க முற்படுகிறாய் !

உன் நடத்தையையும், வேலையையும், ஏன் உன் ஆத்ம சக்தியை இயக்குவதற்கும், பருவங்களுக்கும், மணத்துளிகளுக்கும் ஏற்ப ஈடுகொடுக்கவேண்டும்.

காலம் (Time), இதை சீரான நீரோடையாக, நீ உருவாக்க வேண்டும். அதன் கரைமேல் உட்கார்ந்து, அதன் ஓட்டத்தை உற்று நோக்க வேண்டும்.

ஆனாலும், உன்னுள் இருக்கும் காலத்தின் அளவிலாத் தன்மை, காலத்தின் எல்லையிலாத் தன்மையை உணர்த்துகின்றது.

மேலும் தெளிவாக்குகின்றது. நேற்று என்பது இன்றைய நாளின் நினைவு: நாளையென்பது இந்நாளின் கனவு.

எது உன்னுள் இசை எழுப்புகின்றதோ, சிந்திக்கின்றதோ, அது இன்னும் இந்த அண்ட சரா சரத்தில், நட்சத்திரங்களைச்

சிதறச் செய்த, ஆரம்ப காலகட்டத்திற்குள் இருந்து வருகின்றது.

உங்களில் யார்தான் உணரவில்லை. அவனுடைய அன்புசெலுத்தும் சக்தி எல்லை யில்லாதது என்று !

எல்லையற்ற இந்த அன்பை (அருள்), ஒரு சிந்தனை யினின்று, மற்றொரு சிந்தனைக்கும், ஒரு செயலிலிருந்து, மற்றொரு செயலுக்கும் இந்த அன்பு பரவாமல் ஒரு இடத்தில், குடிகொண்டிருந்தாலும், யார் தான் இதை உணராமல் இருக்கின்றார்கள்.

காலம் என்பது, அன்பைப் போல், பிரிக்க முடியாதது அளவிட முடியாதது.

உங்கள் உள்ளத்தில், காலத்தை பருவங்கள் கொண்டு பிரிக்க வேண்டுமானால் ஒரு பருவம் மற்றெல்லா பருவங் களையும் சூழ்ந்து கொள்ளட்டும்.

நினைவுகளால், இன்றைய நாள், கழிந்த காலத்தைத் தழுவட்டும். எதிர்காலத்தை, ஆசையால், ஆர்வத்தால் நிரப்பட்டும்.

★

அந்த நகரத்தில் உள்ள பெரியவர் ஒருவர் கேட்டார். நன்மைத் தீமைகளைப்பற்றி பேசுங்கள்.

அவன் பதில் சொன்னான்.

உங்களிடம் உள்ள நன்மையைப் பற்றி பேசுகிறேன். தீமையைப் பற்றி அல்ல. தீமை யென்பது என்ன? நன்மை, பசியாலும், தாகத்தாலும் சித்ரவதை செய்யப்படுவது தான்.

உண்மையைக் கூறுமிடத்து, பசிவந்திடின் நன்மை, இருள் சூழ்ந்த குகைகளிலும் தன் உணவைத்தேடும். அதற்கு தாகம் ஏற்படின் துர் நாற்றமுள்ள, தண்ணீர் களையும்கூட குடிக்கும்.

நீ, நீயாக இருக்கும் பொழுது, நல்லவராக இருப் பீர்கள்.

ஆனால், நீ உன்னை முற்றிலும் உணராத பொழுதும், நீ கெட்டவனாக இருக்கமுடியாது.

சச்சரவு மிகுந்த வீடு, திருடர்களின் குகையல்ல. அது சச்சரவுமிகுந்த வீடுதான்.

நங்கூரம் பாய்ச்சிய கப்பல், பயங்கர அலைகளி னிடையே அலையுமே தவிர, அது கடலின் அடித்தளத்தில் சென்று விடாது.

ஞானி

நீ மிகுந்த நல்லவன். நீ உன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும் பொழுது. உன் சே வை யைப் பிறருக்கு அளிக்கும் பொழுது.

நீ கெட்டவனுமில்லை நீ உன் லாபத்தைத் தேடி அலையும் பொழுது!

ஏன் எனில் நீ லாபத்தை வேண்டி அலையும் பொழுது, பூமியில் ஊடுருவி, அதன் மார்பகத்தினின்றும் உறிஞ்சும் வேர்துாய்கள் ஆகின்றாய்

நிச்சயமாக பழங்கள் வேர்களை நோக்கிச் செல்ல முடியாது. "என்னைப் போல் சேவை செய்யுங்கள் முதிர்ந்து, நிறைந்து, எப்பொழுதும் நிறையக் கொடுங்கள்," என்று.

ஏன் எனில், பூரித்த பழம், வெடித்துக் கொடுத்து, தான் ஆகவேண்டும். அதைப் போலவே, பெறுதலும், உறிஞ்சுதலும் வேர்களின் தேவைகள்.

உன் கடமைகளை உணரும் பொழுதும், சொற்களின் பொருளை அறிந்து சொல்லும் பொழுதும், நீ நல்லவனாக இருக்கின்றாய்!

உன் கடமைகளை மறந்து, தூங்கும் பொழுதும், உன் சொற்கள் குறிக்கோள் இல்லாமல் தடுமாறும் பொழுதும்,

ஞானி

நீ கெட்டவன் இல்லை, ஏன், உன் வார்த்தையில் ஏற்படும் தடுமாற்றம், பலவீனமான உன் எண்ணங்களுக்கு, உறுதி கொடுக்கவும் கூடும்.

நீ ஒரு நல்லவன். உன் குறிக்கோளை நோக்கி உறுதி யாக, வீறுநடை போடும்பொழுது :

நீ ஒரு கெட்டவன் அல்ல. அதை நோக்கி நீ தடுமாறிச் செல்லும்பொழுதும் நொண்டி, நொண்டிச் செல்வோரும், பின்னேக்கிச் செல்வது இல்லை அல்லவா ?

ஆனுல் உறுதியும், வேகமும் உள்ள நீங்கள், பலவீனன் முன், அவனுக்கு அனுதாபம் காட்டுவதாக, நொண்டிக் காட்டாதீர்கள்.

பல வழிகளில் நீங்கள் நல்லவர்கள். நீங்கள் நல்லவர் களாக இல்லாத பொழுதும், கெட்டவர்கள் இல்லை. நீங்கள் சோம்பித் திரிகின்றீர்கள். மந்தமாக பணியாற்று கின்றீர்கள்.

பாவம்! ஒருமான், தன் வேகத்தை ஒரு ஆமைக்குக் கற்றுத்தர முடியுமா ?

நீ, உன்னை, மிகப் பெரியவனுக்கிக் கொள்ளும் ஆசை யில், முயற்சியில், உன் நற்குணம் புதைந்து இருக்கின்றது. உங்கள் எல்லாரிடத்தும் அந்த ஆசை இருக்கின்றது.

ஞானி

ஆனல், உங்களில் சிலருடைய வேட்கை பெரும் நீர் வீழ்ச்சியெனவே உருவெடுத்து. பெரும்பலத்துடன் மலைப் பகுதிகளில் ஊடுருவிப்பாய்ந்து, அதன் இரகசியச் செல்வங்களையெல்லாம், திரட்டிக்கொண்டு, காடுகள் வழி வந்து, அதன் இனிய கானங்களைக் கவர்ந்து, பெருங்கடலை அடைகின்றது.

மற்றவர்க்ளிடம் அவ்வேட்கை, ஒரு அகன்ற ஆறுபோல் ஆரம்பித்து, அதன் ஓட்டம், கரை வளைவுகளால், தடைப் படுத்தப்படுகின்றது. ஆகவே கடலை அடைவதற்கு முன்னல், தேங்கி தேங்கிச் செல்ல வேண்டி யிருக்கின்றது. ஆகவே, அதிக வேகம் உள்ளவர்கள், அது குறைந்தவர் களிடம், "நீ ஏன் தடுமாறி மெதுவாகச் செல்லுகின்ருய்? என்று, இடித்துக் கூறவேண்டாம்.

ஏன் எனில், உண்மையில் நல்லகுணம் படைத்தவர் கள், ஒன்றும் இல்லாதவர்களைப் பார்த்து, (நிர்வாணமாக இருப்பவர்களை), "உன் ஆடைகள் எங்கே?" யென்றும், வீடு இல்லாதவர்களிடம் (அநாதைகளிடம்), "உன் வீடு என்னவாயிற்று?" என்றும் கேட்பதில்லை.

★

ஒரு சந்நியாசினி கேட்டாள்:

"பிரார்த்தனையைப் பற்றிச் சொல்லுங்கள்":

அவன் பதில் சொல்லலுற்றான்.

நீ கஷ்டத்தில் இருக்கும்பொழுதும், தேவைகள் பூர்த்திச் செய்யப்படாமல் இருக்கும்பொழுதும், நீ பிரார்த்தனை செய்ய முற்படுகிறாய்!

உன் சுகமான நாட்களிலும், உன் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்து இருக்கும் பொழுதும், உன் செழுமை வாழ்க்கையிலும், நீ பிரார்த்தனை செய்தால் எப்படி இருக்கும்! எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்ததுண்டா?

பிரார்த்தனை என்பது என்ன? உன் உயிர் மூச்சு, வீசும் வெளியில் (Ether) கலப்பது தான்!

அந்த அற்புத வெளியில் (Space), உன் இருளைக் கொட்டுவதுதான், உனக்கு ஆறுதல் அளிக்கின்றது எனில், உன் இதயம் தெளிவுற்று இருக்கும் பொழுதும், அதை வெளியில் சேர்ப்பது, உனக்கு மகிழ்ச்சித் தருவதாக இருக்க வேண்டும்! இதை நீ நினைத்துப் பார்த்தது உண்டா!

நீ, உன் ஆத்மாவினால், எப்பொழுதெல்லாம் பிரார்த்தனைக்கு, அழைக்கப்படுகின்றாயோ, அப்பொழுதெல்லாம்,

அழுவதுதான், உன்வேலையெனில், நீ கிளர்ந்து எழ வேண்டும். அதனால், நீ அழுதுகொண்டிருந்தாலும். மீண்டும், மீண்டும் மகிழ்ச்சி அடையும் கட்டம் வரை, நீ கிளர்ச்சி பெற வேண்டும்!

நீ பிரார்த்தனை செய்யும் பொழுது, அதே வேளையில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் மற்ற உயர்ந்தோர் நிலையும், நீ இவ்வுலகில் அடைகின்றாய்: அவ்வேளையில் அல்லாது, மற்ற நேரங்களில் உன்னால் அவ்வுன்னத நிலையை அடைய முடியாது.

ஆகவே, நீ கோயிலுக்குச் செல்லுவது, கண்களுக்குப் புலனாகாத அந்த அற்புத ஆனந்தத்திற்கும், இனிமையான சங்கமத்திற்கு மட்டுமே, பயன்படவேண்டும்.

ஏனெனில், நீ கோயிலுக்கு செல்வது, அதை கருத்தில் கொண்டு, கேட்பதற்காகவும், யாசிப்பதற்காக வும் மட்டுமே ஆகில், நீ ஒருபொழுதும் பெறுவதற்கானத் தகுதியை அடையமாட்டாய். உன்னை சிறுமை படுத்திக் கொள்வதற்குத்தான், நீ அங்கு போகவேண்டுமானால், நீ அங்கு உயர்த்தப்பட மாட்டாய்!

பிறருடைய நலனுக்காக கூட, நீ அங்கு யாசிப்பதற்குச் சென்றால், நீ சொல்வது, கேட்பது, நிச்சயமாகக் கேட்கப்

படாது, யாரும் காணுமல், நீ கோயிலுக்குச் செல்வது நல்லது. போதுமானது.

வார்த்தைகளைக் கொண்டு, எப்படி பிரார்த்தனை செய்வது எனும் வித்தையை, என்னுல், கற்பிக்க முடியாது,

தெய்வீகம், உன்னை ஆட்கொண்டு, உன் உதடுகளை பேசவைக்கும் நேரம் தவிர மற்றைய நேரங்களில், உன் வார்த்தைகளைக் கடவுள் ஏற்றுக் கொள்வதில்லை.

காடுகளும், மலைகளும், கடல்களும், இசைக்கும் பிரார்த்தனை கீதங்களை, உங்களுக்கு என்னுல் போதிக்க முடியாது.

ஆனுல், காடுகளிலும், மலைகளிலும், அலை கடல்களிலும், பிறந்து வளர்ந்து, வாழும் நீங்கள், அவைகளின், பிரார்த்தனைக்குரலை, உங்கள், இதயத்தில் உணரலாம்.

இரவின் மோன அமைதியில், நீங்கள் உற்று கேட்பீர்கள் ஆகில், அவைகள் மௌனமாக, பிரார்த்தனையில் ஈடுபட்டு இருப்பதை உணரலாம்.

நம் தெய்வம் என்பது, சிறகடித்துச் சிந்திக்கும் நம் உள்மனம் தான்.

ஞானி

நம்மில் உறைந்திருக்கும், அக்கடவுளின் சித்தம் தான், நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. உணர வைக்கின்றது. செயல்பட வைக்கின்றது! அக்கடவுளின் எண்ணமே, நம்முள், ஆசைகளாக உருவெடுக்கின்றன.

"தெய்வமே உன் வேகம் தான், எம்முடைய இரவுகளை பகலாக்குகின்றன. இரவுகளும், பகல்களும், தெய்வமே! உன் அற்புத விளைவுகளே."

[அத் தெய்வீகச்சக்தியைக் கொண்டு. நம் வாழ்வில், வறுமை அல்லது வளமையைக் காணலாம்.]

"தெய்வமே, எங்களுக்குத் தெரியாது, எங்களுக்குத் தெரியாது!!. முற்றிலும் தெரியாது. எங்கள் உள்ளத்தில் அவைகள் உதிக்கும் முன்னரே, தெய்வமே உனக்குத் தெரியும்!"

தெய்வமே, நீ தான் எங்கள் தேவை. உன்னை எங்களுக்குக் கொடுக்கும் பொழுது தான், நீ எல்லா வற்றையும், எங்களுக்குக் கொடுத்து விடுகின்றாய்"

ஆண்டு தோறும், அந்நகருக்கு, வருகை தரும், துறவியொருவன் கேட்டான். "இன்பம், மகிழ்ச்சி யென்பது என்ன"?

அவன் சொல்லுகிருன் !
மகிழ்ச்சி என்பது விடுதலை கீதம்.
ஆனால் அது விடுதலை அல்ல.
அது, உன் ஆசைகள் பூத்து மலருவதுதான்.
உன் வேட்கை வெளிப்படுவது தான்.
ஆனால் அதுகனிந்து வருவது அல்ல.

அது ஒரு குறை : நிறையை நோக்கி நகர்கின்றது. ஆழ்பள்ளம் : உயர மேட்டில் ஏறுவது. ஆனால் அது பள்ளமும் அல்ல. மேடும் அல்ல. அடைப்பட்ட ஆசை வெளியேறுகின்றது. கூண்டிலிட்டது, இறக்கை கொண்டு பறக்கின்றது. ஆனால், அது வேலிகொண்டு அடைக்கப் படாத வெளி (இடம்) அல்ல.

ஆம் ! உண்மையைச் சொல்லுமிடத்து, மகிழ்ச்சி என்பது விடுதலை கீதம் தான்.

மனநிறைவுடன், நீங்கள் பாடுவது எனக்கு மகிழ்ச்சி இல்லாமல் இல்லை. ஆனாலும், அப்படி இசைப்பதில் உங்கள் இதயத்தை இழந்து விடாதீர்கள்.

ஞானி

உங்களில் சிலர்—இளைஞர்கள்—சிற்றின்பத்தை நாடுகின்றீர்கள்.— அதுதான் எல்லாம் என்றும் நினைக்கின்றீர்கள். அவர்கள் செயல் நியாயத்திற்கு முன் கொண்டு வந்து, குறைகூறப் படுகின்றது.

நான் அவர்கள் செயலைப்பற்றித் தீர்ப்புக் கூறமாட்டேன். குறை ஏதும் காணமாட்டேன். அவர்களுக்கு வேண்டியதை பெற்று, அனுபவிக்கட்டும்.

ஏன் எனில், அவர்கள் இன்பத்தை அடைவார்கள். அதுமட்டுமா அடைவார்கள் ? அதன் ஏழு துணைகளையும் கண்டு கொள்வார்கள். அடிமட்டத்தில் உள்ளது, இவர்கள் தேடிய இன்பத்தை விட மிக அழகாக இருக்கும்.

நீங்கள் கேள்விபட்டதில்லையா ? கிழங்குகளை தேடி, மண்ணைத் தோண்டியவன், புதையல் எடுத்ததை !!!

உங்களில், சில பெரியவர்கள், தாங்கள் அனுபவித்த சிற்றின்பங்களை, ஏதோ குடி போதையில் செய்த குற்றங்கள் போல் நினைவு கூறுகின்றார்கள்.

ஆனால் அப்படி வருந்துவது, உள்மனத்தைத் திரை யிட்டுக் கொள்வதுதான். ஆனால், அதைத் தண்டிப்பது அல்ல. வெறும் பிராய சித்தம் தான்.

ஞானி

அவர்கள், தாங்கள் பெற்று அனுபவித்த இன்பங்களை பெருமிதத்துடன், நன்றியுடன் நினைவு கூறவேண்டும். கோடையில் கொண்டு வரும், பெரும் அறுவடையைப் போல். ஆயினும், வருத்தம் கொள்வதுதான், அவர்கள் ஆறுதல் எனில், அப்படியே அவர்கள் ஆறுதல் பெறட்டும்.

உங்களில் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் சிற்றின் பத்தைத் தேடியலையும் இளைஞர்கள் இல்லை: சென்று போனவைகளை நினைவு கூறும், வயதானவர்களும் இல்லை,

ஏன் தெரியுமா!

இன்பத்தைத் தேடி அலைவதில் உள்ள பயம்: அவைகளை நினைக்கும் அளவில் பயம்: இப்பயத்தில், எல்லா இன்பங்களையும், வெறுத்து ஒதுக்கித் தள்ளுகின்றார்கள். ஆன்மீக உணர்வு சிதைந்து விடுமோ: அல்லது அவமதிப்பு ஏற்படுமோ என்ற பயம்:

அப்படி இன்பங்களைப் புறக்கணிப்பதில் தான், கைவிடுவதில் தான், அவர்கள் இன்பம் இருக்கின்றது.

ஆகவே, அவர்கள் தயக்கத்துடன், நடுங்கும், கரங்களுடன், கிழங்குகளையே தேடி, பூமியைத் தோண்டினாலும், அவர்கள் திரவியத்தையே, காணுவார்கள். பெரும் புதையலைத் தேடி கண்டெடுப்பார்கள்.

ஞானி

சொல்லுங்கள்! ஆன்மீக சக்தியை யார்தான் சிதைக்க முடியும்: புரிந்துகொள்ளாமல் இருக்க முடியும்?

இரவின் அற்புத அமைதியை, இனிய குரலெடுத்துப் பாடும் பறவை, கலைத்துவிட முடியுமா? சொல்லுங்கள்! மின்மினிப்பூச்சி, விண்மீன்களின் பட்டொளியை சூன்யமாக்கி விட முடியுமா?

உங்கள் விளக்கொளியும், புகையும், காற்றை கனமாக்கி, ஆடவிடாமல் செய்துவிட முடியுமா!

என்ன! ஆன்மீக சக்தியென்பது, தேங்கியிருக்கும் தண்ணீர்: அதையொரு தடிகொண்டு கலைத்துவிட முடியும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா!

அடிக்கடி, நீங்கள். உங்களுக்கு இன்பங்களை மறுப்பதால், நீங்கள் என்ன செய்கின்றீர்கள் தெரியுமா? அந்த பூர்த்தி செய்யப்படாத ஆசைகளை, உங்கள் அடி மனத்தில் புதைத்து வைக்கின்றீர்கள்! ஆம்! இப்படி தவிர்க்கப்படுகின்றவைகள், நாளையொரு நாள் விஸ்வரூபம் எடுப்பதற்காகவே காத்திருக்கின்றன என்று, யாருக்குத் தான் தெரியாது?

ஞானி

உங்கள் உடலுக்கு, அதன் பாரம்பரியத்தைப் பற்றியும், அதன் சரியான தேவைகளைப் பற்றியும், நன்கு தெரியும்.

அதை உங்களால் ஏமாற்ற முடியாது! உங்கள் உடல், உங்கள் ஆன்மாவின் இசைக்கருவி.

அது உங்கள் இஷ்டம்: சாதுரியம்: இனியகானம் எழுப்புவதா! அல்லது அவலக்குரலைத் தீட்டுவதா? என்று நீங்கள் உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்? "இன்பங்களில் எது நல்லது? எது கெட்டது?" என்பதை எப்படி பாகு படுத்தித் தெரிந்துகொள்வது என்று.

உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்:" இன்பங்களில், எது நல்லது, எது நல்லது அல்ல என்று எப்படி கண்டறிவது?"

வயல்வெளிக்கும், தோட்டத்திற்கும் தேடிச்செல்லுங்கள்: தேனீக்கள் மலரின் மதுவை உறுஞ்சுவதைக் காணுங்கள்

மலரின் இன்பம் மதுவை வழங்குவது.

பூக்கள் என்பது, தேனீக்களின் உயிர் ஊற்று.

மலருக்கு, தேனீ காதல் தூதுவன்.

ஞானி

மலருக்கும், தேனீக்கும் கொடுப்பதும், பெற்றுக் கொள்வதும் இன்பமாகும். ஒன்றுக்கு தேவை: மற்றதுக்கு பேரின்பம்: சுவர்க்கம்.

ஆர்பிலீஸ் பெருமக்களே! உங்கள் இன்பங்களில் மலர்களின் மாண்பும், தேனீக்களின் இயல்பும் இருக்கட்டும்.

★

ஒரு கவிஞன் கேட்டான் :

"அழகைப் பற்றிச் சொல்லுங்கள்" என்று :

அவன் பேசலானுன் :

நீங்கள் எங்கே அழகைத் தேடுவீர்கள்? அதை எப்படி கண்டுகொள்வீர்கள்? அது உங்கள் வழியாகவும், வழிகாட்டியாகவும் இருந்தாலொழிய, அது உங்களால் முடியுமா?

அதைப்பற்றி உங்களால் எப்படி பேசமுடியும்? உங்கள் பேச்சு அதனுல் செயல் செம்மையுருதவரை?

"அழகு மிருதுவானது : பரிவுள்ளது", என்று, வருத்தம் உள்ளவர்களும், கொடுமைக்கு ஆளானவர்களும் கூறுகின்ருர்கள்.

தன் பெருமையில், பூரித்து வெட்கப்படும் புதிய தாய் போல் 'அழகு நம்மிடையே நடைபோடுகின்றது".

வேகமும், தாபமும் உள்ளவர்கள் சொல்லுகின்ருர்கள்? "அப்படி இல்லை அழகு என்பது, பலம் வாய்ந்தது: குலை நடுங்க வைப்பது."

"அது, பெரும் புயலெனவே, அடியில் உள்ள பூமியையும், மேலேயுள்ள வானத்தையும், நிலைகுலையச் செய்கிறது"!!

ஞானி

களைத்து இருப்பவர்கள், வாழ்வின் சுவையை இழந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

"அழகு மிருதுவாகப் பேசும் தன்மையது: நம் ஆன்மாவில் அது குரல் கொடுக்கிறது."

"எப்படி மங்கலான ஜோதி, கவிந்துவரும் இருளைக் கண்டு நடுங்குகின்றதோ, அதைப்போல, நம் அமைதியில், அழகின் குரல் சங்கம மாகின்றது."

'அதன் ஓசையுடன், குளம்பொலிகள் வந்தன. சிறகுகள் விரிந்து துடிப்பதும், சிங்கங்ளின் கர்ஜனையும் கேட்டன',

நகரின் இரவு காவல்காரர்கள் சொல்லுகின்றார்கள்.

"கீழ்திசையில் காலைக்கதிரவன் புலரும் பொழுது, அழகு அங்கு மிளிர்ந்து எழுகின்றது."

உச்சி வேளையில் இளைப்பாறும் உழைப்பாளிகளும், வழிப்போக்கர்களும் சொல்லுகின்றார்கள்.

சூரிய அஸ்தமனத்தின் பொழுது, அழகு சாய்ந்து, தவழ்வதை நாங்கள் பார்த்திருக்கின்றோம்."!!

ஞானி

குளிர் காலத்தில், உறைபனி பேசுகின்றது "அழகு வஸந்த காலத்தில், மலைகளின் மேல், குதித்தோடி வருகின்றது''!!

சுடும் கோடையில், அறுவடை செய்யும் தொழிலாளர் கள் சொல்லுகின்றார்கள்.'' இலையுதிர் காலத்து இலை களில் அழகு தவழ்வதை நாங்கள் பார்த்திருக்கின்றோம். மேலும், அவன் முடியில் அழகு தாண்டவமாடுவதையும் கண்டிருக்கின்றோம்.''

அழகுதனைப் பற்றி இத்தனையும் சொல்லி இருக்கின்றீர்கள்.

உண்மையைச் சொல்லுமிடத்து, அழகைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் தணிக்கப்படாத ஆசை களைப் பற்றியே பேசியிருக்கின்றீர்கள்.

அழகு, மிக்க அவசியம் அல்ல: தேவையும் அல்ல. ஆனால் அழகு ஒரு அபூர்வ ஆனந்தம்.

அது வாயில் வாடும் தாகமும் அல்ல. வெறும் கைதனை விரிப்பதும் அல்ல.

ஆனால் அது, பூரித்த இதயம். பரமானந்தத்தில் திளைத் திருக்கும் பரமாத்மா!

நீ பார்த்திடும் சித்தரமும் அழகு இல்லை. நீ கேட்கும் தேவகானமும் அழகு அல்ல.

ஞானி

இமைகளை மூடியிருந்தாலும் நீ பார்க்கின்றாயே அபூர்வ சித்திரம்: காதுகள் கேட்காமலிருந்தாலும். நீ செவிமடுக்கின்றாயே தெய்வீக இசை! அதுதான் அழகு.

மரத்தில் கடைந்து எடுத்திடும் உருவமும் அழகு அல்ல. இணைந்திடும் இறக்கைகளும் அழகு அல்ல. பூத்துக் குலுங்கும் தோட்டமும், எப்பொழும் கூட்டமாக பறந்திடும் தேவதைகளின் கூட்டமுமே அழகு.

ஆர்பிலீஸ் பெருமக்களே! உங்கள் வாழ்கையில் அழகு என்பது மெருகிடும்! எப்பொழுது தெரியுமா! உங்கள் முகங்களில் தெய்வீகக்களை சொட்டும் பொழுது.

ஆனால், நீங்கள் தான் உயிரும், அதை மறைத்திடும் திரையும்.

அழகு யென்பது என்ன தெரியுமா? அண்டசராரத்தின் அற்புதத்தை, ஒரு கண்ணாடியில், கொண்டுவருவதுதான்!

ஆனால் நீங்கள்தான் அண்ட சராசரமும், அந்த கண்ணாடியும்.

★

ஞானி

ஒரு வயது முதிர்ந்த பாதிரியார் கேட்டார்.

"மதம் (Religion) பற்றி சற்று பேசுங்கள்," என்று.

அவன் சொன்னான் :

"நான் வேறு எதைப் பற்றி இது வரை பேசியிருந்தேன்! மதத்தைப் பற்றியே தான் பேசிவந்தேன்?

மதம் (Religion) என்பது என்ன? முற்றிலும் செயலும் சிந்தனையும் அல்லவா?

கைகள் கற்களை உடைத்திடும் பொழுதும், தறியில் நெய்துகொண்டிருக்கும்பொழுதும், செயல் அல்லது சிந்தனை இல்லாதிருக்கும்பொழுதும், உன் ஆத்மாவில் ஆனந்த ஊற்றெடுத்து பொங்கிவரும் அற்புதத்தையும், ஆச்சரியத்தையும், அனுபவித்தது இல்லையா?

செயல்களினின்று ஆதங்கத்தையும், தொழிலில் உள்ள நம்பிக்கையையும் யாரால் பிரிக்க முடியும்?

யார்தான் உங்கள் முன் உள்ள நேரத்தை "இவ்வளவு தான் கடவுளுக்கு, இவ்வளவு தான் எனக்கு—இந்தநேரம் என் ஆத்ம சிந்தனைக்கு – இந்த நேரம் என் உடலைப் பேணுவதற்கு," என்று பாகுபடுத்திக் கொள்வார்கள்?

ஞானி

எல்லா மணித்துளிகளும் நேரப் பாகுபாடும் என்ன தெரியுமா ? பரந்த வெளியின் வழியாக, ஒரு தந்நிலை (Self) யினின்று, மற்றெருரு தந்நிலைக்கு விரைந்திடும், பாவமே.

என் சுத்தமும் நேர்மையுமே என் அணிகலன் என்று, பிதற்றுகின்றவர்கள், ஏன் நிர்வாணமாகவே திரியலாமே !

வீசும் காற்றும், கடும் சூரியனும் அவன் உடல் சருமத்தினை, துளைக்கவும் செய்யாது. சற்றும் பாதிக்கவும் செய்யாது.

எவனெருவன், தன் குணங்களையும், நடத்தையையும், நீதிக்கற்றைகளையும், போதனைகளையும் கொண்டு விளக்க முற்படுகின்றானே, அவன் சுதந்திரமாக, சுயேச்சையாகச் செயல்படமுடியாது. அவன் சிந்தனை எல்லைக் கோட்டி னுள்ளே, தத்தளித்து நிற்கும். அவன் தன் இதய கீதத்தை, கூண்டினுள் அடைத்துவிடுகிறான்.

அருமையான, அற்புதமான, சுயேச்சையான கீதம், கூண்டுகளினுள், கம்பிகளினிடையே அடைப்பட்டு கிடப்பது இல்லை.

எவன் கடவுளைத் தொழுவதை, பிரார்த்தனை செய் வதை, ஒரு இஷ்டம் போல் செய்கின்றானே, ஒரு

ஜன்னலைப்போல், அதைப் பயன்படுத்துகின்றானோ, அவன், ஆத்மசிந்தனை யெனும், உள்ளகத்தை உணர்ந்தான் இல்லை. ஆத்மாவின் வழி (ஜன்னல்) எப்பொழுதும் மூடப்பட்டு இருப்பது இல்லை. இரவு பகல் எவ்வேளையிலும். அது திறந்தே இருக்கும். ஆம், பொழுது புலர்ந்ததிலிருந்து, மறு நாள் பொழுது புலரும் வரை மூடப்படுவதே இல்லை.

உன் அன்றாட வாழ்க்கைதான், உன் கோயிலும், உன் மதமும். அதுவே, உன் தொழும் இடமும், பிரார்த்தனைக் கூடமும். நீ வேலைக்குப் புறப்படும்பொழுதும், தொழில் செய்ய முற்படும் பொழுதும், உன்னையும் (Self: your Being) உன்னுடன் அழைத்துச்செல். உன் எல்லாவற்றையும் விட்டுச் செல்லாதே. உன்னுடன் எடுத்துச் செல். ஏர் கலப்பையையும், சுத்தி கோடரியையும், ஏன் உன் தம்பூரா வையும், உன்னுடன் எடுத்துச் செல்.

ஏன்? உன் மகிழ்ச்சிக்காக உருவாக்கப்பட்ட எல்லா பொருள்களையும் உன்னுடன் எடுத்துச்செல்.

உன் மகிழ்ச்சியில், கற்பனை இன்பத்தில், உன் சாதனை களின் உச்சகட்டத்திற்கு மேல் எழமுடியாது. உன் மகத்தான வேதனையிலும், உன் படுதோல்விகளின் அதமகட்டத்தின் கீழேயும் விழமுடியாது. உன்னுடன், எல்லோரையுமே அழைத்துச்செல்.

ஞானி

உன் புகழ்ச்சியில், உன் நம்பிக்கையின் உயர் கட்டத்திற்கு மேல் எழமுடியாது. உன் வீழ்ச்சிதன்னில் உன் வேதனையின் அதமகட்டத்தின் கீழேயும், விழமுடியாது.

கடவுளை முற்றிலும் உணர்வதற்கு ஒரே வழிதான் உண்டு. பிரச்சினைகளை நீயாகவே தீர்த்துவிடலாம் என்று நினைத்து விடாதே!

நீ கடவுளைக் காணவேண்டுமா? குழந்தைகள், விளையாடும் இடந்தனில் எல்லாம் நீ அவனைக் காணலாம்.

பரந்த வெளியைப்பார். உன் தெய்வம் மேகங்களினிடையே தவழ்வதைக் காணலாம்.

கொட்டும் மழையிலும், பேரிடி மின்னல்களிலும், அத்தெய்வத்தின் காக்கும் கரங்கள் எங்கும் பரவி இருப்பதை உணரலாம்.

பூக்களில் எங்கும் அத்தெய்வம் புன்னகைபூத்து பரந்து இருப்பதைப் பார்க்கலாம். பிறகு மரங்களில் எழுந்து, தன் கரங்களை காட்டி, உயர்ந்து இருக்கும் நம் தெய்வத்தை உணரலாம்.

★

பிறகு அல்மேத்ரா பேசினர்: அவர் கேட்டார்: "இப்பொழுது மரணம் என்பது என்ன என்று எங்களுக்குச் சொல்லுங்கள்."

நீங்கள் சாவின் இரகசியம் என்ன என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

நன்ருக வாழ்ந்து, நிறைந்த அனுபவம் உள்ள ஒருவனுல் தான் அதன் தன்மையை முற்றிலும் உணரமுடியும். வாழ்வின் மையத்தினைத் தொட்டவன் தான், அதன் இதயத்தை உணர்ந்தவன் தான், இறப்பின் உண்மையை உணர்த்த முடியும்?

நீ நிச்சயமாக, இறப்பின் தன்மையை உணரவேண்டின், வாழ்வெனும் உயிர் உடலில், உன் இதயத்தை மிக நன்ருகத் திறந்துபார்.

ஏன் எனில், வாழ்வதும், சாவதும் ஒன்றுதான்: வேறல்ல: எப்படி ஆறும், கடலும் ஒன்ருக இருக்கின்றதோ அதைப்போல்: உங்கள் ஆசைகள், நம்பிக்கைகள் முதலியவற்றின் ஆழத்தில், மறைந்து கிடைக்கின்றது.

இறப்பு என்ன என்பது: அதன் தாத்பரியம் என்ன என்பது: மரணத்தின் மகிழ்ச்சியான மாயம்!

ஞானி

மண்ணில் புதைந்திருக்கும் விதைகள் எப்படி தன் பருவத்திற்காகக் காத்திருக்கின்றதோ, அப்படியே, உன் உள்ளம் வரப்போகும் வஸந்த காலத்தை எதிர்நோக்கி, இன்பக் கனவுகள் காண்கிறது.

உன் கனவுகளை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்: அவை களில் அற்புத உண்மை பொதிந்திருக்கின்றது. அங்கு அண்டசராசரத்தின், வாயில் கதவைப் பார்க்கலாம்: அங்கு பரம்பொருளின் உண்மை ஓங்கிக் கிடக்கின்றது.

சாவைப்பற்றி நீங்கள் ஏன் பயப்படுகின்றீர்கள்? அதில் பயங்கொள்ளுவதற்கு ஒன்றும் இல்லை.

அரசவையில், ஒரு ஆடுமேய்ப்பவன் நின்று, அரசனைப் பார்க்கும் பொழுது நடுங்குகிறான்: அரசன் அவனுக்கு ஒரு பெரிய கவுரவம் கொடுப்பதற்குத் தன்னை அழைத் திருக்கின்றான் எனறு தெரிந்தும், பயத்தில் தவிக்கின்றான்!

அந்த நடுக்கத்தின் அடிப்படையில், அவன் ஆனந்தம் அடங்கியிருக்கின்றது என்ற உண்மை அவனுக்குத் தெரியாமலா இருக்கின்றது?

தனக்காக ராஜ கவுரவம் கிடைக்கவிருக்கின்றது என்ற மகிழ்ச்சிதான் அவன் வெளிப்படையான பயத் திற்குக் காரணம்.

ஞானி

அதே சமயம், உள்ளத்தில் மகிழ்ச்சியும் வெளி நினைவில் பயமும், நடுக்கமும் அவனை வாட்டுகின்றன.

செத்து மடிதல் என்பது என்ன தெரியுமா? வீசும் காற்றில் நிர்வாணமாக நிற்பது, ஒளிரும் கதிரொளியில் உருகி மறைவது—இதுதான்.

மூச்சு நின்று விடுதல் — என்பது என்ன தெரியுமா? — ஓய்வில்லாத அலைகளினின்று, சுவாசித்தலுக்குச் சற்று ஓய்வு கொடுப்பதுதான்! ஏன் தெரியுமா? அவ்விடுதலைப் பெற்ற சுவாசம், எழுந்து, நிமிர்ந்து, விரிந்து, தெய்வத்தினிடம், எந்தவித தடங்கலும் வில்லங்கமும் இல்லாமல் சரண் அடைவதற்குத்தான்.

நிசப்தமான, சலனமில்லாத, ஆழமான, அமைதியான ஆழத்திலிருந்து எவன் ஒருவன் பருகுகின்றானோ, நிச்சயமாக, அவன் ஒருவனால் மட்டுமே தேவகானம் எழுப்ப முடியும்! பாடமுடியும்!! அனுபவிக்கமுடியும்!!!

ஆம்! நீ மலையின் உச்சியின் முடிவை அடைந்தவுடன்தான், நீ முழுவதும், ஏற ஆரம்பிக்கின்றாய்? முடிவுதான் ஆரம்பத்தின், ஆரம்பம்.

ஞானி

உன் அவையவங்கள், மண்ணில் புதையுண்ட பிறகு தான், நீ உண்மையில் ஆடிப்பாடி மகிழ்கின்றுய், முடிவின் எல்லேதான், ஆனந்தத்தின் எழுச்சி — ஆரம்பம்.

★

அது அந்திவேளை நெருங்கிவரும் சமயம்:

அல்மேத்ரா சொன்னார்: "இந்நாளும், இந்த இடமும், எங்களை ஆசீர்வதித்த, தங்கள் பரிசுத்த ஆத்மாவும் தெய்விகத்தன்மை உடையது".

அவன் பேசலுற்றான்:

"நான் உங்களிடையே பேசமட்டும் செய்யவில்லை: கேட்டுக்கொண்டுமிருந்தேன். என்பாதை தனிமையானது"

அலைந்து, திரிந்து அண்டசராசரத்தின் உண்மைகளைக் கண்டுகொண்டவன். பழுத்து உதிரும் விதைகள்போல், நான் உலவி, உதிர்கிறேன்.

நான் மீண்டும் வருவேன் தன்யனாக:

அலைகள்போல் மீண்டும் திரும்புவேன்:

தேங்கும் தண்ணீரில், மலையின் உச்சிகள் பிரதி பலிப்பதுபோல், உங்கள் உயர் எண்ணங்களை, படம் பிடித்துக் காட்டினேன்:

ஞானி

உங்கள் அளவிலாதன்மையை எடுத்து இயம்ப லானேன்.

ஒரு மனிதனை, அவன் தவறுகளைக்கொண்டு அள விடக்கூடாது. மிதக்கும் நுரைகளைக்கொண்டு, கடலின் எல்லைகளைக் கணக்கிடமுடியுமா? வார்த்தைகளில் வெளிப் படும் அறிவுச்சுடர், வார்த்தைகள் வெளிப்படுத்த முடியாத அறிவின் சாயல்தான்:

யார் சாவைப்பற்றி பயப்படுவார்கள் தெரியுமா? மரணத்தின் முழுவுண்மையைத் தெரிந்துகொள்ளாதவர்கள்:

உடலில் தங்கியிருக்கும் உயிர்மூச்சு, உயிரைத்தேடி அலையும்பொழுதுதான், மரணத்தின் பயம் தோன்றும்:

சவக்குழிகளில், உன் மூதாதையர்களை மட்டும் நீ பார்க்க வில்லை: உன்னையும், உன்குழந்தைகளும் அங்கு தாண்டவ மாடுவதைக் காணமுடியும்!

உங்களிடமிருந்து ஒரு உண்மையைக் கற்றுக் கொண்டேன்:

இவ்வாழ்க்கைக்குப்பிறகு உள்ளதாகம் அதிகமானது.

வாழ்க்கையில் ஏற்படும் மிகப்பெரும் அதிர்ஷ்டம் என்ன தெரியுமா?

ஞானி

உங்கள் ஆசைகள், நிராசைகளாகவேண்டும்: குறிக்கோள்கள் வறண்டுவிடவேண்டும்: அப்பொழுதுதான். வாழ்க்கையின் வற்ருத ஊற்று அளவிலாமல் சுரக்கும். ஒரு ஓடையில், என் தாகத்தைத் தணிக்கமுற்படும்பொழுது, உயிரோட்டமுள்ள நீர், மிகுந்த தாகம்கொண்டதாக இருப்பதைக் காண்கிறேன்.

நான் அதை அருந்தும்பொழுது, என்னை அது விழுங்குவதை நான் பார்க்கிறேன்.

நான் கூலிவாங்க அவமானப்படுவேன்: பரிசுகள் பெறுவதற்கு அல்ல.

என்னிடம் நீங்கள் காட்டிய பரிவு மகத்தானது: நான் புகழ்ச்சி செய்யவில்லை: அதிகம் பாராட்டுவது, சாபத்தில் முடியும்:

நான் காடுகளிலும், மலைகளிலும், வேறு இடங்களிலும் அலைந்து திரிந்தவன்: வெகுதூரத்தில் இருந்தால்தான், அருகில் இருப்பதன் அருமைதெரியும்: புரியும்:

நான் அலைந்து கொண்டிருந்தபொழுது. என்னை உபசரித்து அழைத்தீர்கள்: ஆனால் அலைவதில்தான் என் இன்பம் இருக்கின்றது.

ஞானி

தனிமையின் ருசியே வேருனது: அலாதியானது: இன்பமானது.

வானில் உலவும் உங்கள் ஆத்மாவைதான் நான் தேடியலேந்தேன். அதைக் குறிவைத்துதான் வேட்டை யாடிக்கொண்டிருந்தேன். ஆனுல், வேட்டையாடுபவனும், வேட்டையாடப்படுகிருன்.

நம்பிக்கையுள்ளவனுக்கும், தெளிந்தவனுக்கும் அதிக ஐயங்கள் ஏற்படுகின்றன,

என் வார்த்தைகள் தெளிவு இல்லாமல் இருந்தால் அவைகளைத் தெரிந்துகொள்ள முற்படாதீர்கள். எல்லா பொருள்களும் தெளிவில்லாத, உருவமில்லாத பொருள் களினின்றுதான், ஆரம்பமாகின்றன. ஆனுல், அது முடிவு இல்லே.

படிகம் என்பது என்னதெரியுமா? சிதையும், சிதையும் ஆவிப்பொருள்தான். இன்றைய உருவம்தான் திடமாகத் தோன்றுகின்றது.

எது உங்களிடம் மிகவும் பலவீனமாகத் தோன்று கின்றதோ, எது நடுக்கம் கொண்டிருக்கின்றதோ, அதுதான்

ஞானி

மிகவும் பலம் உள்ளதாகவும், அதிகதிடம் உள்ளதாக இருக்கும்: மாறும்:

உங்கள் மூச்சுதான், உங்கள் முதுகெலும்பாக மாறி யிருக்கின்றது.

மனிதனின் கனவுதான் இன்றைய நாகரீக உலகமாக உருவெடுத்திருக்கின்றது. என்ருவது ஒருநாள் மறைந்துவிடும், மூச்சுதனை உங்களால் பார்க்க முடிகின்றதா?

கனவுகளின் கருத்துக்கள், உங்களுக்குப் புரியுமானுல், உங்களுக்கு வேறுகுரல் ஒன்றும் கேட்காது.

இருளும், ஒளியும் ஒன்று என்ற உண்மை புலப்படும்.

நான் புறப்படுகிறேன். என் கலம் தயாராய் இருக்கின்றது.

என் கப்பலின் சுக்கான் எது தெரியுமா?

பொறுமை, எப்பொழுதும் பொறுமை!

நான் வருகிறேன்:

ஓடிவரும் ஆறு, கடலில் கலப்பதுபோல், இயற்கை அன்னை, அவள்குழந்தையை அணைத்துக்கொள்ளுகிருள்.

ஞானி

கப்பல் புறப்பட்டது. அவனும் மறைந்து விட்டான்:

காற்றின் குரல், அல்மேத்ராவிற்குத் தெளிவாகக் கேட்டது.

"சற்றுநேரம், காற்றுதனில் அமைதி: மீண்டும் ஒரு பெண்மணி, என்னை பெற்றெடுப்பாள்".





பிழைத் திருத்தங்கள்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	10	முட்டத்தினிடையே	மூட்டத்தினிடையே
2	14	உறித்து	உரித்து
10	16	தூக்கத்தின்	துக்கத்தின்
11	10	விழிகள்	வழிகள்
13	14	துளை	துளி
15	11	சுவர்களுக்கு	அவர்களுக்கு
25	16/17	இன்,னும்	இன்னும்
30	18	நிர்மானிக்கும் பொழுது	நிர்மாணிக்கும் பொழுது
50	4	அழுவதற்கு	விழுவதற்கு
56	8	மாயில்களையும்	மயில்களையும்
65	3	நங்கூரம்	சுக்கான்
65	4	நங்கூரம்	சுக்கான்
77	13	எதனால்	அதனால்
78	14	uine	wine
79	7	மணத்துளிகள்	மணித்துளிகள்

நீ ஏன் தயங்குகிறாய் ?

மீளமுடியாத - கடன் சுமையில் தத்தளிக்கின்றாயா ?

" ஞானி படியுங்கள் "

எல்லா வளமையும் வேண்டி வந்து சேரும் !
நிறைந்த செல்வம் சேரும் !!
சர்வ மங்களம் உண்டாகும் !!!
கூனனும் நிமிருவான் !!!!

" ஞானி படியுங்கள் "

கோழையும் கோபுரம் ஏறி கொடி பிடிப்பான் !
தோல்வியில் துவளுகின்றீர்களா ?
வாடி வருந்துகின்றீர்களா ?
நாடுங்கள் : " கலீல் ஜிப்ரானை "

" ஞானி படியுங்கள் "

முரசு அதிரும் !
வெற்றிமேல் வெற்றி வந்து
உங்களை வாகை சூட்டும் !

- நல்லான் சக்ரவர்த்தி ஸ்ரீனிவாஸராமஸ்வாமி
